மலேசியத் தமிழ் ஆய்விதழ்

MALAYSIAN JOURNAL OF TAMIL

தொகுதி 2 (பகுதி 1)

Volume 2 (Issue 1)

ஜூன் 2024 / June 2024

வெளியீடு:
மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்

Published by:
Malaysian Tamil Academics Appreciative Association

eISSN 2990-9694

Malaysian Journal of Tamil

மலேசியத் தமிழ் ஆய்விதழ்

Website: http://kpatmalaysia.com/ojs/index.php/mjt/index

eISSN:

2990-9694

Publisher:

Malaysian Tamil Academics Appreciative Club
No. 64, Fasa 2, Taman Kenanga, 33000 Kuala Kangsar, Perak, Malaysia
016-8956014
kpat.malaysia@gmail.com

வெளியீடு:

மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்

The publisher of Malaysian Journal of Tamil will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

©Malaysian Tamil Academics Appreciative Association. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

eISSN 2990-9694

9 772990 969001

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

தொல்காப்பியக் கோட்பாட்டு நோக்கில் பத்தி இலக்கியங்கள் காட்டும் மெய்ம்மயக்கவிதிகள்

Tholkappiyam Theory of Meymmayakkam in Tamil Devotional Literature

சீனிவாசன் சந்திரன் / Seeniwasan Redi Sandran[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R Annamalai[2]*

[1]M. Ed Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியக் கோட்பாட்டு நோக்கில் பத்தி இலக்கியங்கள் காட்டும் மெய்ம்மயக்கவிதிகளை ஆராய்தல் ஆய்வின் நோக்கமாகும். சொல்லின் ஒலிப்பு எளிமை கருதி, இன்னின்ன மெய்கள் ஒரு சொல்லில் அடுத்தடுத்து அமைதலின் முறை பற்றிய வரம்பு தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த எழுத்து முறையைப் பற்றி விளக்குவன மெய்ம்மயக்க விதிகளாகும். இன்று தமிழ் எழுதுவோர் எழுத்தில் க், த், ப் ஆகியவை சக்தி, பக்தி, முக்தி எனவாறு வேற்றுநிலை மெய்ம்மயக்கில் வருவதாகவும் இது பற்றிய அறிதல் அவர்களிடத்தில் இல்லை என்பதாகவும் இலக்கண ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சக்தி, பக்தி, முக்தி போன்ற சமற்கிருதச் சொற்கள் பெரும்பாலும் இறைவனைத் தொடர்புபடுத்தும் சொற்கள் என்பதால், தமிழ்ப் பத்தி இலக்கியப் பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. க், த் என்னும் இரு மெய்களின் மெய்ம்மயக்கம் குறித்து மட்டும் ஆராய்தல் ஆய்வின் வரையறையாகக் கொள்ளப்படுகிறது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், விநாயகர் அகவல், திருவருட்பா, தாயுமானவர் பாடல்களில் சக்தி, பக்தி, முக்தி என்கிற சொற்கள் முறையே சத்தி, பத்தி, முத்தி என மெய்ம்மயக்க விதிகளுக்கு உடன்பட்டு ஆளப்பட்டிருப்பதாகச் சான்று நிறுவப்படுகிறது.

கருச்சொல்: பத்தி இலக்கியம், தொல்காப்பியம், மெய்ம்மயக்கக் கோட்பாடு

Abstract

This study explores Tolkāppiyam's Theory of Meym'mayakkam in Tamil Devotional Literature. In Tolkāppiyam, the theory of Meym'mayakkam explains using similar consonants contemporaneously and dissimilar consonants in a word where to ease the phonetic in it. In this study, the theory of Meym'mayakkam of consonants k (க்), and t (த்) have been implemented. The Tamil grammar researchers have stated, that modern Tamil writers write words like Cakti, Pakti, and Mukti by using the k (க்), p (ப்) and t (த்) consonants which are classified as Vēṟṟunilai meym'mayakkam. Tamil Grammar researchers opined that modern Tamil writers write these words in this way because of their vague understanding of this meym'mayakkam theory. Since Cakti, Pakti, and Mukti are Sanskrit words used to express devotional, Tamil Devotional Literature has been chosen as the subject for this study. Tamil Devotional kinds of literature like Tēvāram, Tiruvācakam, Tirumantiram, Tiruppukaḻ, Vināyakar Akaval, Tiruvaruṭpā, Tāyumāṉavar mentioned the words Cakti, Pakti, and Mukti as Catti, Mutti, Patti where it clearly expressed Tolkāppiyam's theory of meym'mayakkam has been implemented in them.

Keywords: Devotional Literature, Tholkappiyam, Theory of meymmayakkam

முன்னுரை

தமிழ்மொழி அமைப்பியல் நோக்கில் சீரிய ஒழுங்கினைக் கொண்டதாகும். எழுத்துகளைக் கொண்டு ஒரு சொல்லை உருவாக்கத் தமிழர்கள் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தனர். சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் இன்னின்ன எழுத்துகள் அமைதல் போல் இன்னின்ன எழுத்துகள் சொல்லின் இடையில் அடுத்தடுத்து அமைதல் பற்றிய வரம்பு தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. எழுத்துகளைத் தனியாக ஒலிக்கும்போது இருக்கும் எளிமை, குறிப்பிட்ட சில எழுத்துகளைத் தொடர்ந்து ஒலிக்கும்போது அஃது இருப்பதில்லை (சீனி நைனா முகம்மது, 2015). ஒலி எழுப்புவதில் சிக்கலைத் தவிர்க்க, எந்த எழுத்துகள் தனது அசைவுக்கு எளிதாக இருக்கிறதோ அந்த ஒலிகளையே நா அடுத்தடுத்து ஒலிக்க முயல்கிறது (சீனி நைனா முகம்மது, 2015). இதனால், ஒலிப்பு எளிதாகவும் இணக்கமாகவும் உள்ளது. இதுவே மெய்ம்மயக்கம் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவ்வகையில், இவ்வாய்வானது தொல்காப்பியக் கோட்பாட்டு நோக்கில் பத்தி இலக்கியங்கள் காட்டும் மெய்ம்மயக்கவிதிகளை ஆராய்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மெய்ம்மயக்கம்

மெய்ம்மயக்கம் எனும் சொல்லில் மெய் என்பது மெய்யெழுத்துகளைக் குறிக்கிறது. மயக்கம் என்றால் இருவேறு பொருள்களுக்கு இடையில் நிலவும், வேறுபாடு தோன்றாத இணக்கம் ஆகும்(சீனி நைனா முகம்மது, 2015). மெய்ம்மயக்கம் என்றால் சொல்லில் மெய்யெழுத்துகள் ஒன்றுடன் ஒன்று ஒத்து இருக்கிற முறை என்பதாகும்(மனோன்மணி தேவி அண்ணாமலை, 2017). தொல்காப்பியத்தில்,

மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே.
(தொல்காப்பியம் – நூற்பா 30)

என்னும் நூற்பாக்கு, க, ச, த, ப நான்கும் தம்முன் தாம் மட்டுமே வருவதையும், ர, ழ இரண்டும் தம்முன் பிறவே வருவதையும், எஞ்சிய பன்னிரண்டு மெய்யும் தம்முன் தாமும் தம்முன் பிறவும் என இருவகையாகவும் வருவதையும் விளக்குகிறார் தமிழண்ணல் (2008). நன்னூலில்,

கசதப ஒழிந்தஈ ரேழன் கூட்டம்
மெய்ம்மைக்கு உடனிலை ரழஒழித்து ஈரெட்டு
ஆகும் இவ்விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கு அளவு இன்றே
(நன்னூல் – நூற்பா 110)

எனும் நூற்பா வழி, க், ச், த், ப் ஆகிய மெய்களுக்குப் பின்னர் வேறு மெய் எழுத்துத் தோன்றுவதில்லை என்பதும் உறுதியாகிறது.

ஆய்வுச் சிக்கல்

இலக்கண ஆய்வாளர் சீனி நைனா முகம்மது(2015), சக்தி, பக்தி போன்ற பிறமொழிச் சொற்கள் முறையே சத்தி, பத்தி என இலக்கியங்களில் புலவர்களால் எழுதப்படுவதாகவும், இன்றோ சிறப்பு மிக்க இந்த மெய்ம்மயக்கத்தைத் தமிழ் எழுதுவோரில் பெரும்பாலோர் அறிந்து கொள்வதே இல்லை என்பதாகவும் விளக்கமளிக்கிறார். அடுத்து, தற்காலத்தில் பலருடைய எழுத்தில் க,த,ப ஆகிய வல்லினங்கள் வேற்றுநிலை மெய்ம்மயக்கில் வருவதை பக்தி, சக்தி, யுக்தி போன்ற எடுத்துக்காட்டுகளில் வழி குறிப்பிடுகிறார் எம். ஏ. நுஃமான்(1999).

ஆய்விலக்கிய மீள்நோக்கு

தமிழ் மெய்ம்மயக்கம் குறித்துச் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனோன்மணி தேவி அண்ணாமலை (2017) ‘மெய்ம்மயக்கமும் புணர்ச்சியும்’ என்னும் தமது ஆய்வில், உரையாசிரியர்கள் இடையே மெய்ம்மயக்கம் குறித்த வேறுபாட்டினை ஆராய்ந்து முடிவில் மெய்ம்மயக்கத்திற்கும் புணர்ச்சி விதிகளுக்கும் தொடர்பு இருப்பதாகச் சான்று நிறுவுகிறார். சங்கர நாராயணன்(2018), ‘எழுத்து, பெயர்களின் வருகை முறைகள் நாஞ்சில் நாடன் படைப்புகளை முன்வைத்து’ என்கிற தமது ஆய்வில், மெய்ம்மயக்கம் எனச் சிறுதலைப்பின் கீழ் 'ர்த், ப்ட், ர்ச், ன்ட்' எனும் அடிப்படையில் தமிழ்மொழியில் ஒலிபெயர்ப்பாகிய வேற்றுமொழிச் சொற்களைக் கண்டறிந்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஆய்வுகள், பொதுவாக மெய்ம்மயக்கம் குறித்து உரையாசிரியர்களிடையே எழுந்த கருத்து வேறுபாடுகளை ஆராய்வதாகவும் சிறுகதைத் தொகுப்பில் மெய்ம்மயக்க விதிகளின் வருகை முறையைக் கண்டறிவதாகவும் உள்ளன. ஆய்வாளரின் ஆய்வு, பத்தி இலக்கியங்களில் மெய்ம்மயக்க விதிகள் மீறப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து ஆராய்தலைக் குறித்து இருப்பதால் மேற்சுட்டிய முன்னாய்வுகளோடு வேறுபடுகின்றது.

ஆய்வு நெறிமுறை

இது தமிழ்ப் பத்தி இலக்கியங்களாக விளங்கும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம், திருவருட்பா, விநாயகர் அகவல், திருவருட்பயன், தாயுமானவர் பாடல்கள் ஆகியவை உட்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு நூலக ஆய்வாகும். சக்தி, பக்தி, முக்தி போன்ற பிறமொழிச் சொற்கள் பெரும்பாலும் இறைவனைத் தொடர்புபடுத்திப் பாடிய பாடல்களில் இடம்பெறும் சொற்களாகும். ஆதலால், இவ்வாய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட பத்தி இலக்கியங்கள் முதன்மை ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்படுகிறது.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

அ) திருஞானசம்பந்தர் தேவாரம் – 2 ஆம் திருமுறை

முத்தி தருவது நீறு
முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு

பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு
திருஆல வாயான் திருநீறே.

முத்தி = மு**த்த்**இ ; பத்தி = ப**த்த்**இ

ஆ) திருநாவுக்கரசர் தேவாரம் - 4 ஆம் திருமுறை

பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம யோகீ
எத்தினாற் **பத்தி** செய்கேன்
என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
அம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறே.

பத்தன் = ப**த்த்**அன் ; பத்தி = ப**த்த்**இ

இ) சுந்தரர் தேவாரம் - 7 ஆம் திருமுறை

முத்தா **முத்தி** தரவல்ல
முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே
பத்தா **பத்தர்** பலர்போற்றும்
பரமா பழைய னூர்மேய. . .

முத்தி = மு**த்த்**இ ; பத்தர் = ப**த்த்**அர்

ஈ) மாணிக்கவாசகர் திருவாசகம் – 8 ஆம் திருமுறை

முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும்வண்ணஞ். . .

முத்தி = மு**த்த்**இ ; பத்தி = ப**த்த்**இ

உ) திருமூலர் திருமந்திரம் / 10 ஆம் திருமுறை

தானா அமைந்தஅம் முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு ஓருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமும் **முத்தி**யும் நல்குமே.

முத்தி = மு**த்த்**இ

பரா**சத்தி** மா**சத்தி** பல்வகை யாலும

தரா**சத்தி** யாய்நின்ற தன்மை யுணராய்
உரா**சத்தி** ஊழிகள் தோறும் உடனே
பரா**சத்தி** புண்ணிய மாகிய போகமே.

சத்தி = ச**த்த்**இ

ஊ) அருணகிரிநாதர் திருப்புகழ் – 6 ஆம் பாடல்

முத்தைத்தரு **பத்தி**த் திருநகை
அத்திக்கிறை **சத்தி**ச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும். . .

பத்தி = ப**த்த்**இ ; சத்தி = ச**த்த்**இ ; முத்தி = மு**த்த்**இ

எ) ஔவையாரின் விநாயகர் அகவல்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி **முத்தி** யினிதெனக் கருளி. . .

முத்தி = மு**த்த்**இ

ஏ) வள்ளலார் திருவருட்பா - பாடல் 514

முத்தியின் முதல்வ போற்றி மூவிரு முகத்த போற்றி
சத்திவேற் கரத்த போற்றி சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருளும் தேவர் சிகாமணி போற்றி போற்றி
பத்தியின் விளைந்த இன்பப் பரம்பர போற்றி போற்றி

முத்தி = மு**த்த்**இ ; சத்தி = ச**த்த்**இ ; பத்தி = ப**த்த்**இ

ஐ) தாயுமானவர் - சின்மயானந்தகுரு

தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
  சித்தாந்த **முத்தி**முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
  சின்மயா னந்தகுருவே.

முத்தி = மு**த்த்**இ

ஒ) உமாபதி சிவாச்சாரியர் திருவருட்பயன் - பாடல் 2

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்**சத்தி**
பின்னமிலான் எங்கள் பிரான்

சத்தி = ச**த்த்**இ

முடிவுரை

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தங்கள் பாடல்களில் மெய்ம்மயக்க விதிகளை முறையாகவே கையாண்டுள்ளனர் என்பது இவ்வாய்வின் பல சான்றுகள் வழி நிறுவப்படுகின்றன. தமிழ்மொழியின் மெய்ம்மயக்க விதிப்படி க், ச், த், ப் என்னும் மெய்கள் தம்முன் தாம் மட்டுமே மயங்குவதால் பக்தி, சக்தி, முக்தி போன்ற பிறமொழிச் சொற்கள் முறையே பத்தி, சத்தி, முத்தி எனவாறே பத்தி இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியின் ஒலிப்பொழுங்கு சிதைந்து விடக் கூடாதெனும் நெறியைப் பற்றித் தொடர்ந்து பின்பற்றிய பண்டைய புலவர்களின் உத்தியானது போற்றத்தக்கதாகும். மெய்ம்மயக்க விதிகள் வெறும் இலக்கணம் என்று எண்ணாமல் எழுத்தொலிகளை அடுத்தடுத்து விரைந்தும் தொடர்ந்தும் ஒலிக்க எளிமையாக்கும் உத்தி என உணர்வது இன்றியமையாதது மட்டுமன்றி மரபைக் காத்திடவும் வழிவகுக்கும்.

துணைநூற்பட்டியல்

Arumuka Navalar, S. (1991). Naṉṉūl kāṇṭikaiyurai pākam 1 eḻuttatikāram. Chennai: Mullai Nilaiyam.

Kamalakkannan, P. (2011). Tiru aruṭpā –āṉaviḷakkam (mutal tirumuṟai pāṭalkaḷuṭaṉ). Chennai: Vanathi Pathippakam.

Kartheges, P. (2016). Pakti neṟi (pakti ilakkiyam ōr aṟimukam). Perak: Muhibbah Publication.

Kovendhan, T. (2000). Tiruppukaḻ meypporuḷ teḷivurai (mutal pākam). Chennai: Shankar Pathippagam.

Manonmani Devi, A. (2017). Ilakkaṇa āyvil oru tumi. Selangor: My Story Enterprise.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

நற்றிணையில் ஏகார இடைச்சொற்களின் பயன்பாடு
The Usage of 'Ekaara Idachol' in 'Natrinai'

ஷண்முகப்பிரியா இளங்கோவன் / Shanmuga Priyaa Elanggovan[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R Annamalai[2*]

[1]B. Ed Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக இடம்பெற்றுள்ள நூல் 'நற்றிணை'. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து 'நற்றிணை' என்னும் பெயரால் இந்நூல் வழங்கப்படுகிறது. இந்நூல் வெண்பாவினால் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. இந்நூலில் 9 அடி முதல் 12 அடிகள் வரையிலான 400 பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை நோக்கி இதற்கு 'நற்றிணை நானூறு' என்ற மற்றொரு பெயரும் உண்டு. நற்றிணைப் பாடல்கள் அக்காலச் சமூகத்தை அறிய பெரிதும் துணைபுரிகின்றன. இப்பாடல்கள் வாழ்க்கையிலும் காதல் நெறியிலும் ஒழுக்க நெறியைச் சாற்றும் தன்மையன. இந்த ஆய்வு நற்றிணையில் காணப்படும் பாடல்களிலிருந்து ஏகார இடைச்சொற்களையும் பாடல்களில் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்கிக் கூறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வாளர் மொத்தம் எட்டுப் பாடல்களைப் பயன்படுத்தி ஏகார இடைச்சொல்லின் பயன்பாட்டை விளக்கியுள்ளார். மேலும், ஏகார இடைச்சொற்களின் வகைகளையும் பாடல்களில் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் விளக்கியுள்ளார். நற்றிணைப் பாடல்களில் ஏகார இடைச்சொற்கள் தேற்றம், வினா, பிரிநிலை, ஈற்றசை ஆகிய நான்கு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கருச்சொல்: நற்றிணை, எட்டுத்தொகை, ஏகார இடைச்சொல்

Abstract

Natrinai is the first book from the Ettuttokai Compilation from the eighteen books of classical Tamil literature. The epithet 'Nal' and the name 'Tinai', which refers to subjective morality, are combined in this book by the name 'Natrinai'. This book has been ranked first by Venba. This book contains 400 poems ranging from 9 feet to 12 feet. There is another name for Natrinai called 'Natrinai Naanooru' in view of the number of poems in the book. The poems in Natrinai helps us to understand our society. The poems in Natrinai teach us about moral in life and love. This study aims to find the verbs of ekaara idaichol in these four hundred poems and explain their usage. The researcher has found such verbs in eight places from the poems and explained their usage. She has also analysed the types of ekaara idaichol and the connection between the sections of the poems. There are four types in ekaara idaichol used in Natrinai poems. There are Thedram, Vinaa, Pirinilai, Idrasai.

Keywords: Natrinai, Ettuttokai, Ekaara Idaichol

முன்னுரை

பண்டைய தமிழ் மக்கள், வாழ்க்கையை அகம் என்றும், புறம் என்றும் பகுத்தனர். உள்ளம் ஒத்த தலவனும் தலைவியும் தாம் உற்ற இன்பத்தைப் பிறருக்கு எடுத்துக்காட்ட கூடாது. இத்தகு காட்டலாகாப் பொருளான காதல் பற்றிய பாடல்களை அகம் என்பர். பிறருக்குப் புலப்படுத்தப்படும் கொடை, வீரம், கருணை முதலிய உணர்வுகள் பற்றிய பாடல்களைப் புறம் என்பர்(Elanggovan, 2017). சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில், அக இலக்கியங்களாக நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அமைகின்றன. பதிற்றுப்பத்தும் புறநானூறும் புற இலக்கியங்களாக அமைகின்றன. பரிபாடல் என்பது பொதுநிலையாகப் பாடப்பட்டுள்ளது. நற்றிணை 9 அடி முதல் 12 அடிகள் வரை அமைந்த 400 பாடல்களைக் கொண்டது. இதைத் தொகுத்தவர் யார் எனத் தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். இந்நூலில் உள்ள பாடல்களைப் பாடியவர்களுள் பெயர் தெரிந்த புலவர்கள் 189 ஆவர். பாடியவர் பெயர் தெரியாத பாடல்கள் 57 உள்ளன. இப்பாடல்கள், வாழ்க்கையிலும் காதல் நெறியிலும் ஒழுக்க நெறியைச் சாற்றும் தன்மைக் கொண்டவை (Ramasubramaniyam, 2009).

நற்றிணைப் பாடல்களின் அடிக்குறிப்புகள் திணை, துறைகளைச் சொல்கின்றன. திணை என்பதன் பொருள் ஒழுக்கம். அகத்திணைகள் ஏழு வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பன ஆகும். நிலப் பாகுபாட்டையும், தலைவன் – தலைவி ஆகியோர் அக வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளையும் ஒட்டித் திணைப் பாகுபாடு அமைந்துள்ளது. துறை என்பது பாடல் வகையைச் சார்ந்தது. எந்தச் சூழலில் பாடல் பாடப்படுகிறது என்பதைத் துறை என்ற பிரிவு விளக்கும்.

இடைச்சொல்

இடை எனப்படுவ
பெயரொடும் வினையொடும்
நடைபெற்று இயலும்: தமக்கு இயல்பு இலவே
(தொல். சொல். 251)

இடைச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து வழங்கும் இயல்பை உடையன: தாமாகத் தனித்து வழங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர். *இடை* என்ற சொல்லுக்கு இடம் என்றும், இடையில் (நடுவில்) என்றும் பொருள்கள் உள்ளன. பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் இடமாகக்கொண்டு, அவற்றின் முதல், இடை, கடை என்ற மூன்று நிலைகளிலும் நின்று பொருள் தெளிவுக்குத் துணைப்புரிவதால் இவை இடைச்சொல் என்று பெயர்பெற்றன. இவை, பெயருக்கும் வினைக்கும் அடுத்த நிலையில் பயன்பாடுடைய சொற்கள் (Seeni Naina Mohamed, 2005). பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய சொற்களின் முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடையிலே

அதாவது சொல்லின் நடுவிலே வருதலால் இடைச்சொல் எனப் பெயர் பெற்றது என்பது சேனாவரையர் கருத்து *(Sivalingganaar,1986).*

ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் நோக்கமானது நற்றிணை என்னும் சங்க இலக்கியப் பாடலில் ஏகார இடைச்சொற்களை அடையாளங்கண்டு அதன் பயன்பாட்டினை விளக்குவதாகும்.

ஆய்வு வரையறை

இவ்வாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட நூல்களில், நற்றிணை உரையாசிரியர் வ. த. இராமசுப்பிரமணியம் அவர்கள் இயற்றிய *'நற்றிணை: மூலமும் உரையும்'* என்ற நூல் இவ்வாய்விற்கு நற்றிணைப் பாடல்களை ஆராய்வதற்குத் துணைபுரிந்தது. இந்நூலை மேற்கோளாகக் கொண்டு இதில் பாடல் எண் 1, 13, 35, 70, 218, 389, 400 ஆகியவை மட்டும் பயன்படுத்தப்பட்டு ஏகார இடைச்சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

ஏகார இடைச்சொல்

ஏகார இடைச்சொல் **பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம்** எனும் பொருள்களை உணர்த்தி நிற்கும். இச்சொல் அசைநிலையாகவும் இசைநிறைக்கவும் வருவதுண்டு (Kumaran, 2017).

ஏ என்ற இடைச்சொல், சொற்களில் வரும்போது பின்வரும் 5 பொருள்களைக் குறிப்பால் உணர்த்தும்: **தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை** (Seeni Naina Mohamed, 2015).

நற்றிணையில் ஏகார இடைச்சொற்கள் ஆய்வு

தேற்ற ஏகாரம்

தேற்றம் என்பது உறுதிப்பொருள்.

பாடல் 1: என்னைப் பிரியாதவர் (பாடியவர்: கபிலர், திணை: குறிஞ்சி)

நின்ற சொல்லர் நீடு தோறு இனியர்
என்றும் என்தோள் பிரிபு அறியிலரே,
தாமரத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீம் தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை

நீர் இன்று அமையா உலகம் போலத்
தன் இன்று அமையா நம்நயந்தருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செல்பறியலரே.

தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணிய தலைவனின் செயலையறிந்த தோழி அதனைத் தலைவியிடம் வருத்தம் தோய உரைக்கிறாள். தோழியின் சொற்களைக் கேட்ட தலைவி தோழியை நோக்கிக் கூறியதே இப்பாடல். இப்பாடலில் *என்றும் என்தோள் பிரிபு அறியிலரே* என்ற அடிகளின் பொருளானது எத்தன்மையிலும் என்னைப் பிரியாதவர் என்பதாகும். இந்த அடியின்வழி தலைவன் தன்னை எத்தன்மையிலும் பிரிய மாட்டார் என்று தலைவி உறுதியாகக் கூறுகிறாள். இந்த அடியில் அறியிலர் எனும் சொல்லில் ஏகாரம் இணைந்துள்ளது. (அறியிலர்+ஏ= அறியிலரே). தலைவன் தன்னை எத்தன்மையிலும் பிரிய மாட்டார் என்று தலைவி உறுதியாகக் கூறுவதினால் *அறியிலரே* எனும் சொல்லானது தேற்ற ஏகார இடைச்சொல் எனப் பொருள்படுகிறது.

இப்பாடலில் *சிறுமை உறுபவோ செல்பறியலரே* என்ற அடிகளின் பொருளானது பிரிந்து செல்லுதற்கு அறியாதவர் என்பதாகும். தலைவன் தன்னைப் பிரிந்து செல்லுதற்கு அறியாதவர் என்று தலைவி உறுதியாகக் கூறுகிறாள். இந்த அடியில் செல்பறியலர் எனும் சொல்லில் ஏகாரம் இணைந்துள்ளது(செல்பறியலர்+ஏ=செல்பறியலரே). தலைவன் தன்னைப் பிரிந்து செல்லுதற்கு அறியாதவர் என்று தலைவி உறுதியாகக் கூறுவதனால் *செல்பறியலரே* எனும் சொல்லானது தேற்ற ஏகார இடைச்சொல்லாக வந்துள்ளது.

வினா ஏகாரம்

தன்னைச் சேர்ந்துவரும் சொல்லுக்கு வினாப்பொருளைத் தருவது. வினாச்சொல் இல்லாமலே வினாப்பொருளைத் தருவதால், வினா ஏகாரம் எனப்படுகிறது.

பாடல் 35: கண் பசந்தது ஏன்? (பாடியவர்: அம்மூவனார், திணை: நெய்தல்)

உழையின் போகாது அளிப்பினும் சிறிய
ஞெகிழ்ந்த கவின்நலம் கொல்லோ! மகிழ்ந்தோர்
கட்களி செருக்கத்து அன்ன
காமம்கொல் இவள் கண் பசந்ததுவே.

களவொழுக்கத்தில் விளங்கும் தலைவியைப் பற்றித் தோழி தலைவனை நோக்கிக் கூறியதே இப்பாடல். இப்பாடலில் *காமம்கொல் இவள் கண் பசந்ததுவே* என்ற அடிகளின் பொருளானது, தலைவனே! நீ அன்பு செய்தாலும் இவளது கண்கள் இன்னமும் பசலைக் கொண்டது ஏனோ? என்பதாகும். இந்த அடியில் பசந்தது எனும் சொல்லில் ஏகாரம் இணைந்துள்ளது. (பசந்தது+ஏ=பசந்ததுவே). தலைவன் அன்பு செய்தாலும் தலைவியின் கண்கள் இன்னமும் பசலைக் கொண்டது ஏனோ? என்று வினா எழுப்பும் வகையில் இவ்வடி அமைந்துள்ளது. பசந்தது எனும் சொல் ஏகாரத்துடன் இணைந்து இந்த அடிக்கு வினாப்பொருளைத் தருகிறது. ஆகவே *பசந்ததுவே* எனும் சொல் இவ்வடியில் வினா ஏகார இடைச்சொல்லாகச் செயல்படுகின்றது.

பாடல் 70: நன்றி மறக்கும் நாரை (பாடியவர்: வெள்ளி வீதியார், திணை: மருதம்)

அனைய அன்பினையோ! பெருமற வியையோ!
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்,
கழனி நல்லூர் மகிழ்நர்க்குஎன்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே.

தலைவனைப் பிரிந்த தலைவி தன்னுடைய காமநோய் மிகுதியின் காரணமாக நாரையை நோக்கிப் புலப்பியதே இப்பாடல். இப்பாடலில் *இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே* எனும் அடியின் பொருளானது, என்னுடைய அணிகலன்கள் நெகிழ்தலை என் தலைவரிடம் உரைத்திலையோ? என்பதாகும். இந்த அடியில் தன் அணிகலன்கள் நெகிழ்தலைத் தன் தலைவரிடம் உரைத்திலையோ? என்று தலைவி நாரையை நோக்கி வினா எழுப்புகிறாள். இவ்வடியில் செப்பாதோய் எனும் சொல்லின் பின் ஏகாரம் இணைந்துள்ளது (செப்பாதோய்+ஏ=செப்பாதோயே). செப்பாதோய் எனும் சொல்லுடன் ஏகாரம் இணைந்து இவ்வடிக்கு வினாப்பொருளைத் தருகிறது. ஆகவே *செப்பா தோயே* எனும் சொல் இவ்வடியில் வினா ஏகார இடைச்சொல்லாகச் செயல்படுகின்றது.

பிரிநிலை ஏகாரம்

பிரிநிலை என்பது, சிலவற்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக்காட்டுவது. பலரில் ஒருவனைப் பிரித்துக்காட்டுவதால் பிரிநிலை ஏகாரம் எனப்படுகிறது.

பாடல் 389: தேன்மணம் கொள்ளும் மலையருவி (பாடியவர்: காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், திணை: குறிஞ்சி)

சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல்
காவல் நீயென்றோளே! சேவலொடு
சிலம்பின் போகிய சிதர் கால் வாரணம்
முதைச்சுவல் கிளைத்த பூமி மிகப்பல

தலைவியொடு பகற்பொழுதில் கூடி மகிழும் தலைவன் தலைவியை வரைவு கொள்ளாது காலத்தைக் கடத்தக்கண்ட தலைவி அவன் சிறைப்புறத்தானாக அவன் செவியுறுமாறு தோழியிடம் கூறுவது போல் உரைப்பதே இப்பாடல். இப்பாடலில் *சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல் காவல் நீயென்றோளே!* எனும் அடியின் பொருளானது சிறுபுனத்தில் உள்ள தினைக்கதிர்களைக் கிளிகளிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பு உன்னுடையதே என்று அன்னை கூறினாள் என்பதாகும். இங்கு அன்னை 'உன்னுடையதே சிறுபுனத்தில் உள்ள தினைக்கதிர்களைக் கிளிகளிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பு' என்று மற்றவரிலிருந்து தலைவியின் பொறுப்பைப் பிரித்துக் காட்டுகிறாள். இவ்வடியில் *நீயென்றோளே* எனும் சொல்லில் பின் ஏகாரம் உள்ளது. இச்சொல்லில் உள்ள ஏகாரம் பிரிநிலை ஏகாரமாகச் செயல்படுகிறது. ஆகவே *நீயென்றோளே* எனும் சொல் இவ்வடியில் பிரிநிலை ஏகார இடைச்சொல்லாகச் செயல்படுகிறது.

பாடல் 400: அறநெறிகாக்கும் சோழர் அரசவை (பாடியவர்: ஆலங்குடி வங்கனார், திணை: மருதம்)

மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்கெட அறியாது ஆங்குச் சிறந்த
கேண்மையொடு அளைஇ நீயே,
கெடுவறியாய் என் நெஞ்சத்தானே.

பரத்தையின் பால் பிரிந்து சென்ற தலைவன் மீளவும் தன் மனைவியை நாடிய வகையில் பரத்தை தலைவனை நோக்கித் தன் பிரிவாற்றாமையைக் கூறியதே இப்பாடல். இப்பாடலில் *கேண்மையொடு அளைஇ நீயே, கெடுவறியாய் என் நெஞ்சத்தானே* எனும் அடிகளின்

பொருளானது சிறந்த நட்புரிமையோடு என்னை மகிழ்வித்த நீயே என் நெஞ்சிலிருந்து நீங்காதவன் ஆயினை என்பதாகும். இவ்வடியில் நீயே எனும் சொல்லில் ஏகாரம் உள்ளது. (நீ+ஏ=நீ+ய்+ஏ = நீயே). இங்கு நீயே என் நெஞ்சிலிருந்து நீங்காதவன் என்று பரத்தை தன்னுடன் பழகிய தலைவனைப் மற்றவரிலிருந்து பிரித்துக் காட்டுகிறாள். ஆகவே, *நீயே* எனும் சொல்லில் உள்ள ஏகாரம் பிரிநிலை ஏகார இடைச்சொல்லாகச் செயல்படுகிறது.

ஈற்றசை ஏகாரம்

ஈற்றசை ஏகாரம் செய்யுளில் பயன்படும் ஏகார இடைச்சொல் ஆகும். செய்யுள்களில், குறிப்பாக, பாக்களில் இறுதி சீர் ஏகாரத்தில் முடிவது மரபு. செய்யுள் நிறைவைக் காட்டுவதே அன்றி வேறு தனிப்பொருள் இதற்கு இல்லை.

பாடல் 13: தலைவியின் களவொழுக்கம் (பாடியவர்: கபிலர், பண்: குறிஞ்சி)

எறிபொற் பிதிரின் சிறுபல் காய
வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
மயிலறிபு அறியா மன்னோ,
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே.

தலைவி இயற்கைப் புணர்ச்சியில் தலைவனைக் கண்ட பின்னர் மேனியில் கண்டமாற்றத்தை அறிந்த தோழி, தலைவியின் களவொழுக்கத்தை உணர்ந்து மறை முகமாகக் கூறியதே இப்பாடல். இப்பாடலின் இறுதி சீரில் உள்ள கிளி எனும் சொல்லில் ஏகாரம் சேர்க்கப்பட்டுள்ளது. (கிளி+ஏ=*கிளியே*). இப்பாடலின் இறுதி சீர் ஏகாரத்தில் முடிவுபெற்றுள்ளது. *கிளியே* எனும் சொல்லில் உள்ள ஏகாரம் செய்யுளின் நிறைவைக் காட்டுகிறது. அதற்கென்று தனிப்பொருள் ஏதும் கொண்டிருக்கவில்லை. ஆகவே, இச்சொல்லில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஏகாரம் ஈற்றசை ஏகார இடைச்சொல்லாகக் கருதப்படுகிறது.

பாடல் 218: தனிமை கண்டு இரங்குகின்றேன் (பாடியவர்: கிடங்கில் காவிதி கீரங்கண்ணனார், திணை: நெய்தல்)

குராஅற் கூகையும் இராஅ இசைக்கும்
ஆனா நோயட வருந்தி இன்றும்
தமியேன் கேட்குவென் கொல்லோ!
பரியரைப் பெண்ணை அன்றில் குரலே.

தலைவன் மணம் கொள்ளத்தாமதம் செய்ததால் மனம் கவலை கொண்ட தலைவியை நோக்கி இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்குமாறு கூறிய தோழியைக் கண்டு தலைவி வருந்திக் கூறியதே இப்பாடல். இப்பாடலின் இறுதி சீரில் உள்ள குரல் எனும் சொல்லில் ஏகாரம் இணைந்துள்ளது. (குரல்+ஏ=*குரலே).* இப்பாடலின் இறுதி சீர் ஏகாரத்தில் முடிவுபெற்றுள்ளது. *குரலே* எனும் சொல்லில் உள்ள ஏகாரம் செய்யுளை நிறைவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கென்று தனிப்பொருள் ஏதும் கொண்டிருக்கவில்லை. ஆகவே, இச்சொல்லில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஏகாரம் ஈற்றசை ஏகார இடைச்சொல்லாகக் கருதப்படுகிறது.

முடிவுரை

நற்றிணை நூலில் ஏகார இடைச்சொற்களைக் கண்டறிந்து அவற்றின் பயன்பாட்டினை இந்த ஆய்வில் விளக்கப்பட்டுள்ளன. ஏகார இடைச்சொலின் நான்கு வகைப் பயன்பாட்டினையும் நற்றிணையில் கண்டறிய முடிந்தது (தேற்றம், வினா, பிரிநிலை, ஈற்றசை). வரையறைக்குட்பட்ட நற்றிணைப்பாடல்களில் எண் ஏகார இடைச்சொற்களைக் கண்டறிய இயலவில்லை. நற்றிணைப் பாடல்களின் துறை விளக்கங்களும் சிறப்புத் தகவல்களும் இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. உணர்வு வெளிப்பாடும் தெளிவான கருத்துப் பரிமாற்றமும் மொழியின் இரண்டு அடிப்படை நோக்கமாகும். இந்த நோக்கங்களைச் சிறப்பாக நிறைவேற்றும் ஆற்றலை மொழிக்கு வழங்குவது இலக்கணமாகும். தமிழ் இலக்கணப் பகுதிகளில் ஒன்று ஏகார இடைச்சொற்களாகும். ஏகார இடைச்சொல் சொற்களில் தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை ஆகிய பொருள்களைக் குறிப்பால் உணர்த்துவதற்குப் பயன்படுகிறது. சொல்லின் கடைநிலையில் மட்டும் தோன்றும் ஏகார இடைச்சொற்களை மாணவர்களுக்கு மிக எளிதாகப் புரியும்படி ஆசிரியர் கற்றல் கற்பித்தலில் புகுத்தினால் இப்பாடப்பகுதியில் மாணவர்கள் சிறந்து விளங்குவர் என்பது திண்ணம்.

துணை நூற்பட்டியல்

Seeni Naina Mohammed, S. (2015). Nalla Tamil Ilakkanam, Ungal Kural Enterprise, Penang, Malaysia'

Ramasubramaniyam, V. T. M. A. , (2009). Natrinai Moolamum Uraiyum, Tirumagal Nilayam, Chennai, India'

Balasubramaniam Ku. Vae. , (2011). Natrinai Mulamum Vuraiyum, New Century Book House, Chennai,India.

Seeni Naina Mohammed, S. (2015). Puthiya Tamil Punarchi Vithigal, Ungal Kural Enterprise, Penang, Malaysia.
Elanggovan N. (2017). Sanga Ilakkiyam-II, Tamil Virtual Academy, India.
https://www. tamilvu. org/ta/courses-degree-p104-p1044-html-p1044111-27078
Kumaran R. (2017). idaichol porulgal, Tamil Virtual Academy, India.
https://www. tamilvu. org/ta/courses-degree-a021-a0213-html-a021331-6458
Mani. A, (2019). Marabilakkana Paarvaiyil Idaichol, Nunavilan, Puthucheri, India.
Puliyur Kesigen, (2001). Natrinai Irandaam Paguthi, Paari Nilayam, Chennai, India.
//www. tamilvu. org/library/nationalized/pdf/59-puliyurkesigan/020. nathrinaipart2. pdf
Sathya Priya, (2023). Natrinai Asiriyar Kurippu, Pothu Nalam, India.
https://www. pothunalam. com/gk-in-tamil/natrinai-asiriyar-kurippu/
Vaikaiselvan, (2024). Sanga Ilakkiyam: Natrinai Or Arimugam, Tinathanthi, Chennai, India.
https://www. dailythanthi. com/News/SirappuKatturaigal/2020/03/14161715/Sangam-Literature-An-Introduction-to-Natrinai. Vpf

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

'நீயின்றி மெய்ப்படுமோ' சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் கல்வி நிலை

The Educational Status of Women in the Collection of Short Stories 'Neeyindri Meipdumo'

நவீன் கணேசன் / Navin G Ganeson [1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R Annamalai[2]

[1]M. Ed Research Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வு, 'நீயின்றி மெய்ப்படுமோ' சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் கல்வி நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 'நீயின்றி மெய்ப்படுமோ' சிறுகதைத் தொகுப்பு நூலில் 20 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில், கதையாசிரியர் 20 கதைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பெண்களின் கல்வி நிலையை ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. இவ்வகை நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் 12 சிறுகதைகளில் பெண்களின் கல்வி நிலை கண்டறிந்து முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் வழி 'நீயின்றி மெய்ப்படுமோ' சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் கல்வி நிலை வெளிப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

கருச்சொற்கள்: நீயின்றி மெய்ப்படுமோ, சிறுகதை, பெண்கள், கல்வி நிலை

Abstract

This study is based on the educational status of women in the collection of short stories 'Nee Indri Meippadumo'. There are 20 short stories in the collection of short stories 'Nee Indri Meippadumo'. Based on this, the purpose of this study is to examine the educational status of women as revealed in 20 stories by the writer. This study was carried out in a qualitative approach. The data for this review was handled in a library research approach. This research has been carried out in a descriptive approach using books, research articles, etc. suitable for this type of library research. In this study, the educational status of women is identified in 12 short stories. Through this study, it is possible to know that the educational status of women has been revealed in the collection of short stories, 'Nee Indri Meippadumo'.

Keyword: Nee Indri Meippadumo, short story, women, educational status

முன்னுரை

மலேசியத் தமிழ்ப் படைப்பிலக்கிய வரலாற்றில் சிறுகதை வடிவம் முக்கிய இடம்பெறுகின்றன. தொடக்கக் காலம் [1930-1941], சப்பானியர் காலம் [1942-1945], கதை வகுப்பு முடியும் காலம் [1946-1952], விடுதலைக்கு முந்தைய காலம் [1953-1957], விடுதலைக்குப் பிந்தைய காலம் [1958-1969], மறுமலர்ச்சிக் காலம் [1970-1979], இயக்கங்களின் காலம் [1980-1997], தனிநபர் காலம் [1998-2005], மாற்று ஊடகக் காலம் [2006-2012] என்று இதுவரை மலேசியத் தமிழ் சிறுகதையின் வரலாற்றினை ஒன்பது கட்டமாக வகுத்துள்ளனர் (Vijayalatchumy & Navin, 2020).

மலேசியத் தமிழர்களின் வாழ்வியலையும் வாழ்க்கையில் அவர்கள் பெற்ற தாக்கதையும் இயல்பாக வெளிப்படுத்தி சிறுகதைத்துறை படைப்பிலக்கியத்துறையில் வெற்றிப் பெற்றுள்ளது. இந்தச் சிறுகதைத் துறையின் வெற்றிக்குக் காரணமாக நாளிதழ்களும் எழுத்தாளர் சங்கங்களும் சமூக அமைப்புகளும் பல்கலைக்கழக மாணவர் இயக்கங்களும் தனிநபர்களும் காரணமாக இருக்கின்றனர் (Krishanan, 2020). சிங்கப்பூரில் 1888இல் முதல் சிறுகதை எழுதப்பட்டுள்ளது. ஆனால், இது முழுமையான சிறுகதையின் வடிவத்தைப் பெறவில்லையெனக் கருத்துள்ளன. அதன் பின்பு, 1917ஆம் ஆண்டில் முழுமையான சிறுகதை வடிவத்தோடு முதல் சிறுகதை வெளியிடப்பட்டுள்ளன. இதை எழுதியவர் வ. வே. சு. ஐயர் ஆவார் (Syed Peer Mohammed , 1999). இருப்பினும் 1888இல் முதல் 1950 வரை பல சிறுகதைகள் வந்தாலும் அவையில் முழுமையாக மலேசிய மண் மணம் வீசவில்லை. தமிழகத்தின் கருப்பொருளே அதிகம் காணப்பட்டது. 1950களில் தான் மலேசிய மண்ணை முழுவதும் காட்டும் வகையில் சிறுகதைகள் தோன்ற தொடங்கின (Syed Peer Mohammed, 2001). அன்று முதல் இன்று வரை மலேசியாவில் நடக்கும் நிகழ்வுகளையொட்டியும் கருப்பொருளையொட்டியும் சிறுகதைகள் எழுதப்பட்டு வருகின்றன எனலாம்.

மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள், குடும்பமும் கல்வியும் மனிதநேயமும் காதலும் பெண்ணியமும் சமூகமும் தனி மனிதப் போராட்டங்களும் என்ற கருப்பொருளிலே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு சார்ந்த கருப்பொருள்கள் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் குறைந்தே காணப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது (Veeramohan & Manimangai, 2020). அதன் வரிசையில், தற்போது வெளிவந்த ‘நீயின்றி மெய்ப்படுமோ’ சிறுகதைத் தொகுப்பு நூலிலுள்ள கதைகளும் பெண்ணியம் பற்றி அதிகளவில் எழுதப்பட்டுள்ளன.

மேலும், கல்வி என்பது ஒரு தனி மனிதனை மட்டுமின்றி ஒரு குமுகாயத்தையே அறிவார்ந்த குமுகாயமாக மாற்றுகின்றது. இந்த மாற்றதிற்கு ஏற்ப ஆண் பெண் இருவரும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். அதனினும், பெண்கள் கல்வி கற்பது மிக அவசியம். ஏனென்றால், ஒரு குமுகாயம் உருவாவதற்கு ஒரு பெண்ணே அடிப்படைக் காரணமாக இருக்கின்றாள். பெண் கல்வியின் அவசியத்தைப் பாரதி, பாரதிதாசன் எனப் பலரும் கவிதைகளிலும் கதைகளிலும் பேசியுள்ளனர் (Parvati, 2018). அத்தகைய பெண்

கல்வி இப்போதும் சிறுகதைகளில் பெண் பாத்திரங்களின் மூலம் வெளிப்படுகிறதா என்று ஆராய வேண்டியுள்ளது. அதற்கு, மலேசியாவில் இப்போது புத்தம் புதித்தாக வெளிவந்துள்ள 'நீயின்றி மெய்ப்படுமோ' என்ற சிறுகதைத் தொகுப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இத்தொகுப்பில் பெண்களின் கல்வி நிலை வெளிப்படுகிறதா என்று ஆராய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் விளக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறுகதைத் தொகுப்பிலுள்ள 20 கதைகளும் இவவாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்விலக்கிய மீள்நோக்கு

இந்த ஆய்விற்குத் தேர்வு செய்யப்பட்ட சிறுகதைத் தொகுப்பு 'நீயின்றி மெய்ப்படுமோ...' எனும் தலைப்பில் வெளிவந்த நூலாகும். இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் சரசுவதி உலகன் ஆவார். இந்நூல் 224 பக்கங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. 2023ஆம் ஆண்டு விண்ணொளிப் பதிப்பகத்தாரால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நூலில் 20 சிறுகதை இடம்பெற்றுள்ளன. அவை: அன்பின் கைதி, முள்ளில் ஓர் இளைப்பாறல், மருமகள், காற்று வெளியிடைக் கண்ணம்மா, மனங்கொத்திகள், நீரோடையின் நீராடை, சொல்லாமலே, நீயின்றி மெய்ப்படுமோ, நெஞ்சினில் இல்லை பாரமே, நேரில் வராத நிம்மதி, வேலி, முகமும் உறவும், அமுத சுரபி, இதோ என்றன் தெய்வம், வேடந்தாங்கி, இங்கே ஒரு கங்கை, கடன், வெந்து தணிந்தது, நெஞ்சில் உரமுமின்றி, இருபது ரிங்கிட் ஆகிய இருபது கதைகளாகும். இந்தச் சிறுகதைத் தொகுப்புப் பெண்ணியத்தை முன்னிறுத்தி படைக்கப்படுள்ளது. 20 கதைகளிலும் இருபது விதமான பெண்களையும் அவர்கள் சந்திக்கும் வாழ்வின் சிக்கல்களையும் கொண்டுள்ளது. ஆகவே, இந்தச் சிறுகதைத் தொகுப்பில் பெண்களின் கல்வி நிலை எவ்வாறு அமைந்துள்ளதைக் காணவும் பெண்கள் கல்வி குறித்து ஆசிரியரின் பெண் கதைப்பாத்திரம் எவ்வாறு அமைந்துள்ளதையும் ஆராயவே இந்நூல் ஆய்வுக்காகத் தேர்வு செய்யப்பட்டது (Saraswathi, 2023).

தரவுப் பகுப்பாய்வு

ஆண்களை விடப் பெண்களிடம் உணர்ச்சிகள் வெளிப்படுவது அதிகம். உணர்ச்சிகளில் கட்டுண்டு இருப்பதால் பெண்கள் பல விடயங்களைத் தியாகம் செய்ய வேண்டிய சூழலைச் சமுதாயமோ இயற்கையோ உருவாக்கி விட்டது. இது பெண்களின் சாபம் என்றே கருதுகிறேன். இதனை, **'அன்பின் கைதி'** எனும் கதையில் வரும் பூரணி கல்வி எனும் கோலேந்தி உடைத்தெறிகிறாள். கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான

சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை என்று திருவள்ளுவர் கீழ்க்காணும் குறளின்வழி கல்வியின் முக்கியத்தைத் தெரிவிக்கின்றார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை [குறள் 400]

பெரும்பாலும், பெண்கள் இல்லற வாழ்க்கையுள் நுழைந்த பின்பு, தனது முழு வாழ்க்கையும் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் அன்பணி செய்து விடுகிறாள். கல்வியைத் தொடர்ந்து கற்பதில்லை. ஆனால், பூரணியோ பிள்ளைகள், கணவன் மீதும் அளவற்ற அன்பு இருந்தபோதும் தனது கல்விப் பயணத்தை விடவில்லை. எழுத்தாளர், பூரணி என்ற பாத்திரத்தை நிரம்பக் கற்ற ஒரு குடும்பத் தலைவியாக நமக்குக் காண்பித்துள்ளார். குடும்பத்தின் மீது கொண்ட அதே பற்றைத் தன் கல்வியின் மீதும் வைத்துள்ளாள், பூரணி. எந்தச் சூழலிலும் கல்வியை விட்டுவிடாமல் தொடர்ந்து தனது முனைவர்ப் பட்டப்படிப்பிற்காகத் தமிழ்நாடு சென்ற பூரணியின் செயல்வழி இக்கதையில் பெண் கல்வி நிலை வெளிப்பட்டுள்ளது. இதனை,

> "பூரணி.... பூரண நிலவு போல முகம் உடையவள். அழகும் அறிவும் நிறைந்த விரிவுரைஞர். துடிப்பு மிக்க பெண்ணுங்கூட. எப்போதும் எதையாவது செய்து கொண்டோ படித்துக் கொண்டோ இருப்பது அவளுடைய வழக்கம். பல்கலைக்கழகம் அவளுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அவளைத் தமிழகத்திற்கு முனைவர்ப் பட்டப்படிப்பைத் தொடர அனுப்பி வைத்தது எல்லாமே ஒரு கனவு போலிருந்தது. இதையெல்லாம் அவள் கனவில்கூட நினைத்ததில்லை. அவளிடமிருந்த அசைக்க முடியாத தன்னம்பிக்கையும் உழைக்கத் தயங்காத அவளின் சுறுசுறுப்புமே அவளது இந்த வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தன. திருமணமாகி மூன்று குழந்தைக்குத் தாய் என்பதை மறந்து போனாள். அவளுக்கு 2 முதல் 3 வருட வித்தியாசத்தில் மூன்று பெண் குழந்தைகள். அனைவரும் அவளை உரித்தே பிறந்திருந்தனர். அவர்களைப் பிரிந்து தூரம் செல்வது துன்பமான போதிலும் அதையும் ஏற்றுக்கொண்டாள்"
>
> [அன்பின் கைதி, பக்கம் 4]

என்ற வரிகளில் உணரலாம். ஆகையால், பெண்கள் உணர்ச்சிகளைத் தாண்டியும் தனது கல்வியில் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்று பூரணியின் வாயிலாகப் பெண்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார், எழுத்தாளர்.

அடுத்து, **'முள்ளில் ஓர் இளைப்பாறல்'** எனும் கதையில் இடம்பெற்றுள்ள அன்புமதி கதைப்பாத்திரம் கல்வி நிலையில் சிறந்து உள்ளதாகக் காண்பித்துள்ளார், எழுத்தாளர். அன்புமதி மருத்துவப் படிப்பை முடித்து மருத்துவராக அரசாங்கப் பணியில் உள்ளவளாகக் கதையில் வருகிறாள். திருமணம் முடிந்த பின்பும் மருத்துவர் வேலையை விட்டுக் கணவனை எதிர்ப்பார்த்து இல்லாமல் தனது கல்வி நிலையால் சுயக் காலில் தன்னம்பிக்கையுடன் கதை முழுதும் நகர்கிறாள், அன்புமதி. அன்புமதி, ஒரு கட்டத்தில் தான் கற்ற கல்வியாலே கணவன் மூலம் திருமண வாழ்வில் சிக்கலை எதிர்நோக்குகிறாள். இருப்பினும், தளர்ந்து விடாத

அவள் தனது கல்வியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள். கணவன் திருந்தி வந்தால் ஏற்றுக்கொள்வேன். இல்லையெனில், என்னால் தனியாக வாழ இயலும் என்கிறாள், அன்புமதி. இதனை,

> "எனக்கும் அப்படித் தாங்க... இந்த ரெண்டு வாரம் கேட்டதுக்கே சத்தம் போட்டாங்க. இதுல இன்னும் ஒரு வாரம் எடுத்தா அவ்ளோதான்; அரசாங்க வேலையில அதிகமா லீவு எடுக்க முடியாதே!"
>
> [முள்ளில் ஓர் இளைப்பாறல், பக்கம் 15]

> "ஆமாங்க நிச்சயமா என்னை நம்பித்தான் ஹாஸ்பிட்டல் இருக்குன்னு வச்சுக்குங்களேன். நான் மட்டும் தான் அங்க டாக்டர வேலை செய்யறேன் அப்படின்னு எல்லோரும் நினக்கனும்னு நான் ஆசைப்படறேன். அப்பதான் செய்யுற தொழில்ல நம்பிக்கையும் பக்தியும் பற்றும் வரும். நாடும் உருப்படும் எல்லோருக்கும் பொறுப்பும் கடமையும் என்னன்னு தெரியும்" தன் மனத்தில் உள்ள ஆதங்கத்தை...ஆனால், நியாயத்தைக் கணவனிடம் கூறினாள்"
>
> [முள்ளில் ஓர் இளைப்பாறல், பக்கம் 16]

ஆகவே, இந்தக் கதையில் இடம்பெறும் அன்புமதி எனும் பெண் பாத்திரம் தனது கல்வி நிலையில் இருந்து விலகாமல் சரியான முடிவுகளை எடுத்து நிலைக்குலைந்த தன்னுடைய வாழ்வைச் சரிபடுத்த முயற்சி எடுத்துள்ளாள். இதற்குக் காரணம், அன்புமதியின் கல்வி நிலையே. கல்வியே எக்காலப் பெண்களுக்கும் உற்ற துணையாகும் என்று இக்கதை உணர்த்துகிறது.

மேலும், **'காற்று வெளியிடைக் கண்ணம்மா'** எனும் கதையில் இடம்பெறும் பாரதிவேந்தனின் இரண்டாவது மனைவி கல்வி கற்றவளாக இக்கதையில் வடிவமைத்துள்ளார், கதையாசிரியர். அக்கல்வியே தனது, கணவன் தனக்கு இரண்டகம் செய்த போது வேலை செய்து சுயக்காலில் நின்று தனது இரு பிள்ளைகளையும் தனித்திருந்து வளர்க்கும் துணிவைக் கொடுத்துள்ளது. கணவனையோ மற்றவர்களையோ எதிர்ப்பார்த்து நிற்கும் நிலை அவளுக்கு வரவில்லை. இதற்கு ஒரே காரணம் நடுத்தரக் குடும்பச் சூழலிலும் கணினிப் படிப்பு வரை படித்த அவளின் கல்வி நிலையாகும். இதனை,

> "அப்போது அவளுக்கு 23 வயது இருக்கும். கொஞ்சம் வசதியான நடுத்தரக் குடும்பத்தில்தான் வளர்ந்தாள். போதும் என்று சொல்லும் அளவிற்குப் படித்திருக்கிறாள். கணினி உலகக் கனவுக் கன்னி. ஆனால், படிக்க வைத்தார்களே தவிர வேலைக்கு அனுப்ப மறுத்துவிட்டனர் அவளது பெற்றோர். கடின உழைப்பாளி. ஐந்து ஆண்கள் செய்யும் வேலையைத் தனியாளாகச் செய்வாள்; செய்தும் வந்தாள் திருமணத்திற்குப் பிறகு"
>
> [காற்று வெளியிடைக் கண்ணம்மா, பக்கம் 33]

என்ற கதை வரிகள் வெளிப்படுத்துகிறது. கல்வி கற்று வேலை செய்யாத போதும் திருமணத்திற்கு அவளுக்கு நடந்த துன்பத்திற்கு ஆறுதலாய்க் கல்வி அவள் கல்வியில் இருந்தது. ஆக, இதன்வழி பெண்கள் கற்கும் கல்வியானது இப்போது இல்லையென்றாலும் எப்போவாது ஒரு நாள் கண்டிப்பாக அவளுக்குச் சுயக்காலில் நிற்க உதவும் என்று உறுதியாகிறது.

'நீரோடையின் நீராடை' எனும் கதையில் வரும் கலைமதி முனைவர்ப் பட்டம் படித்து முடித்த ஒரு குடும்பத் தலைவியாகக் கதையினில் வருகிறாள். பெண்கள் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டபோதும் தனது கல்வி நிலையையும் உயர்த்தி கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று கலைமதி எனும் கதைப்பாத்திரம் பெண்களுக்கு ஓர் அறிவுரையை உணர்த்துகின்றது. கல்வி நிலைகளில் உச்ச நிலையான முனைவர்ப் பட்டம் வரை படித்துள்ள கலைமதியின் கல்வி உணர்வு அனைத்துப் பெண்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதை,

> "இரண்டு நாளுக்கு முன்.. முனைவர்ப் பட்டமளிப்பு விழா முடிந்த சந்தோசத்தில் வீடே கலகலத்துக் கொண்டிருந்தது. கலைமதியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை"
>
> [நீரோடையின் நீராடை, பக்கம் 49 – 50]

தொடர்ந்து, **'சொல்லாமலே'** எனும் கதையில் வரும் சின்ன அக்கா எனும் கதைப்பாத்திரம் குறைந்த கல்வித் தகுதிக் கொண்ட பெண்ணாகக் கதையினில் வலம் வருகிறாள். குறைந்த கல்வி நிலை கொண்டதால் அந்தப் பாத்திரம் நிறைய துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கணவன் செய்யும் கொடுமை செயலுக்கு அமைதியாக இருந்தே காலத்தை ஓட்டுகிறாள். எதிர்த்துக் கேள்வி கேட்காமல் கணவன் செய்யும் தவறுக்கு அமைதியாக இருப்பது, தவறுக்கு உடைந்தையாக இருக்கிறாள். மேலும், கணவன் இறந்தபிறகு நான்கு இலக்க எண் எடுக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிறாள். பிறகு, அவளிடம் உள்ள பணத்தை இழந்து கடன் வாங்கும் அளவிற்குத் துணிந்து விடுகிறாள்.

> "குறைந்த கல்வித் தகுதி கொண்டிருந்தாலும் அக்கா அம்மாவைப் போலவே நல்ல உழைப்பாளி. எந்த வேலையும் செய்ய அஞ்சமாட்டாள். சுறுசுறுப்பு அம்மாவிடமிருந்து அவள் கற்றுக் கொண்டது. ஆனால், ஆசை மிகக் கொண்டவள். சீமாட்டியாய் வாழ வேண்டும் என்பது அவள் கற்பனை! ஆசை அழித்துவிடும் என்பதை நன்கு அறிந்தவர் அம்மா. அதனால், தவறு ஏதும் நடக்கும் முன் அம்மா அக்காவுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார்"
>
> [சொல்லாமலே, பக்கம் 60]

ஆக, ஒரு பெண் கல்வியில் சிறந்து விளங்கினால் தான் செம்மை பெறுவது மட்டுமில்லாமல் ஒரு குடும்பமும் குமுகாயமும் செம்மை பெறுகிறது. ஆகவே, பெண்கள் கல்வி கற்பதனால் தீங்கு விளைவிக்கும் செயல்களினால் ஈடுபடுவதைத் தவிர்க்கலாம்.

'நேரில் வராத நிம்மதி' கதையில் வரும் கயல்விழி எனும் கதைப்பாத்திரம் ஓரளவிற்குக் கல்விக் கற்றவளாகக் கதையினில் வலம் வருகிறாள். அந்த ஓரளவிற்கு உள்ள கல்வியறிவே அவளைத் தன் மாமியாரிடமும் கணவனிடமும் இருந்து மீட்டுக் கொள்ள செய்தது. இருப்பினும், முழுமையான கல்வி அறிவு இல்லாததால் கயல்விழி தனது முடிவில் தடுமாறுவதைக் கதையின்வழி காணலாம். ஆக, ஒரு முழுக் கல்வி அறிவே ஒரு பெண்ணிற்குத் துணிவை அளிக்கின்றது. பெண்கள் பாதியோடு அல்லது அரைகுறையாகக் கல்வியைக் கற்க கூடாது. இதனை,

> "கயல்விழி... அவள் கண்கள் அழகானவை. அதனால்தான் அவளுக்குக் கயல்விழி என்று பெயர் வைத்தனரோ என்று கணவன் கிண்டலடிப்பதைக் கேட்டு நாணிப் போவாள். அதுவும் திருமணமான புதிதில்தான். நான்கு வருடமாகிய பிறகு இதெல்லாம் ஒரு பெயரா என்று சலித்துக் கொண்டவனும் அவனே! மாமியாருக்கோ அந்தப் பெயர் வாயில் நுழையவே மறுத்தது. எப்போதும் "பெரியவன் பெண்டாட்டி" என்றே அழைத்து அழைத்து அந்தப் பெயரே அவளுக்கு நிரந்தரமானது. அதிகம் இல்லையென்றாலும் போதும் என்று சொல்லும் அளவிற்குப் படித்திருக்கிறாள்"
>
> [நேரில் வராத நிம்மதி, பக்கம் 96]

என்ற இக்கதையின் வரிகளில் காணலாம்.

அடுத்து, **'வேலி'** எனும் கதையில் எசமானியாக வரும் பெண் கதைப்பாத்திரம் நிரம்பக் கற்றவராக வருகிறார். அவர்களின் இல்லத்திற்குப் பணிப்பெண்ணாக ஒரு வேற்று இனப் பெண் பணிக்கு வருகிறார். அவரின் பார்வையில் இருந்தே இக்கதை நகர்கிறது. பல இன்னல்களைச் சந்திக்கும் அவளுக்கு அவளின் எசமானி அம்மாவே ஆறுதலாக இருக்கிறார். எசமானி அவர்கள் வீட்டில் நடக்கும் சிக்கல்களைச் சரியாகப் புரிந்து கொள்கிறார். மேலும், அச்சிக்கல்களை முறைபடி தீர்த்தும் வைக்கிறார். அப்பணிப்பெண்ணையும் மதித்து அன்புடன் நடத்தி வருகிறார். இதற்கெல்லாம் அடிப்படை காரணமாக எசமானி அவர்களின் கல்வி நிலை இருக்கின்றது. ஆக, கல்வி என்பது ஒரு பெண்ணுக்கு நிதானத்தையும் ஒரு சிக்கலை நன்முறையில் தீர்த்து வைக்கும் பக்குவத்தையும் வழங்குகிறது. இதனை,

> இந்த வீட்டின் கணவரும் எசமானியும் படித்தவர்கள் போலிருந்தனர். எசமானியை எனக்குப் பிடித்துப் போனது. நிமிர்ந்த நடையும் நேர் பார்க்கும் பெண்ணாகவும் இருந்தாள். அன்பாய்ப் பேசுவாள்"
>
> [வேலி, பக்கம் 106]

எனும் வரிகளில் காணமுடிகிறது.

தொடர்ந்து, **'அமுத சுரபி'** எனும் கதையில் வருகின்ற காவியாவின் அம்மா கல்வி கற்றவராகச் சித்தரித்துள்ளார், கதையாசிரியர். அதைக் கதையில் நேரடியாக வெளிப்படாத போதும் அந்தக் கதைப் பாத்திரத்தின் கல்வி நிலை பல இடங்களில் வெளிப்பட்டது. சான்றாக, காவியாவின் அம்மா அலுவகத்தில் வேலை செய்து வருகிறார். மேலும், அவரின் கடமை உணர்ந்து தன் தாயைக் கை விடாமல் அனுசரித்துப் போன அவளது பாங்கும் அவளின் கல்வி நிலையைக் காட்டுகின்றது. இதனைக் கீழ்க்காணும் வரிகள் உணர்த்துகின்றன.

> "...கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். மணி நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாகக் கோப்புகளை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தேன். வீட்டின் நினைவு அடிக்கடி வந்து பயமுறுத்திக் கொண்டிருந்தது. அந்த நேரம் பார்த்துத் தோழி பூரணி அழைத்தாள். அவள் ஐந்தாவது தளத்தில் இருக்கிறாள். நானோ மூன்றாவது தளத்தில் பணியாற்றுகிறேன்"
>
> [அமுத சுரபி, பக்கம் 121]

> "எல்லாவற்றுக்கும் பணமே பிரதானமாக இருந்த காலத்தில்தான் எங்கள் அனைவருக்கும் கல்வியறிவிற்கு வழி வகுத்தார்"
>
> [அமுத சுரபி, பக்கம் 126]

காவியாவின் அம்மா முறையான கல்வி அறிவு பெற்றிருந்ததால் தனது அம்மாவின் சுபாவத்தைப் பொறுத்துக் கொள்ள இயன்றது. ஆக, கல்வி நமக்குப் பொறுமையையும் கடமையையும் உணர்த்துகின்றன.

இதோ என்றன் தெய்வம் எனும் சிறுகதை வெண்பா என்ற பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு நகர்கிறது. வெண்பா எனும் பாத்திரம் கதையில் இளம் மருத்துவராக வலம் வருகிறாள். மருத்துவப் படிப்பை முடித்து அரசாங்கத்தில் மருத்துவராகப் பணியாற்றுகிறாள். மருத்துவராகப் பணி புரியும் வெண்பா கற்ற கல்விக்கு ஏற்றவாறு நோயாளிகளை அன்போடும் மரியாதையோடும் அரவணைத்துப் பேணிக் காத்து வருகிறாள். அவளின் பண்பிற்குக் காரணம் வெண்பாவின் கல்வி நிலை என்றே சொல்லலாம். இதனை,

> "ஏன் டாக்டர் ரொம்ப நாள் லீவு? நீங்க லீவே எடுக்க மாட்டீங்களே.... ! நீங்க இல்லாம போரடிச்சுப் போச்சு டாக்டர்". இப்படிப் பல கேள்விகள். மாறுபட்ட பார்வைகள் என அனைத்தையும் சமாளித்துக் கடமையில் மூழ்கினாள் வெண்பா. நோயாளிகளைப் பார்த்துவரத் தாதி மேகலை கிளம்பினாள். வெண்பாவுடன் நோயாளிகளைப் பார்த்து வருவதென்றாலே மேகலைக்கு மிகவும் பிடிக்கும்."
>
> [இதோ என்றன் தெய்வம், பக்கம் 134]

எனும் கதை வரிகளில் வெண்பாவின் கல்வி நிலையைக் குறித்து அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், அதே கதையில் வருகின்ற முல்லை எனும் கதைப்பாத்திரமும் தனது

கல்வி நிலையை வெளிப்படுத்துகிறது. முல்லை, தன் தங்கையைக் காண முடியா சூழ்நிலையில் கண்ட போதும் அழுகையையும் கதறலையும் கட்டுப்படுத்திக் கொண்டு கல்வி கொடுத்த தெளிந்த சிந்தனையோடு இலக்கியாவை எதிர்நோக்குகிறாள். இதனை,

> "மற்றவர்களாக இருந்தால் அழுது ஆர்ப்பாட்டம் செய்திருப்பார்கள். ஆனால், முல்லை அதற்கு மாறாக நிதானமாகவும் அமைதியாகவும் தெளிவாகவும் இருந்தாள். படித்தவர் பண்பு அவளிடத்தில் நிறைந்திருந்தது."
>
> [இதோ என்றன் தெய்வம், 143]

என்ற கதை வரிகளும் காட்டுகின்றது.

அடுத்து, **'வேடந்தாங்கி'** கதையில் வரும் தாமரை கணினி பயன்படுத்தும் அளவிற்குத் தனது கல்வி நிலையில் சிறந்து விளங்குவதைப் பார்க்க முடிகின்றது. அதோடு மட்டுமில்லாமல், தாமரை பிள்ளைகளால் கைவிடப்பட்ட அன்னையரை வசந்த இல்லத்தில் பேணிக் காத்து வருகிறாள். தனது கல்வி நிலையின் பக்குவத்தின் வெளிப்பாடே தாமரை செயல். தனது தாயின் பெயரிலே தொடங்கி தனது தாய்க்குச் செய்ய முடியாத கடமைகளையும் அன்பினையும் மற்ற தாய்மார்களுக்குக் காண்பித்து வரும் மாண்பும் குணமும் கல்வி கற்ற தாமரையின் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றது. இதனை,

> "கணினியில் மூழ்கியிருந்தாள் தாமரை. அவள் கையில் மாட்டிக் கொண்ட எலி இடதும் வலதுமாக நகர்ந்து கொண்டிருந்தது. அடிக்கடி மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டே, நேரம் ஆனதுகூடத் தெரியாமல் தன் வேலையோடு சங்கமித்துப் போனாள். அவளது கவனம் முழுதும் வேலையை முடித்துவிட வேண்டும் என்பதிலேயே இருந்தாலும் யாரோ தன்னருகில் வந்து நிற்பதைப் போல உணர்வு ஏற்படவே ஒரு நொடி உறைந்து போனாள்."
>
> [வேடந்தாங்கி, பக்கம் 146]

எனும் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

தொடர்ந்து, **'இங்கே ஒரு கங்கை'** எனும் கதையில் வருகின்ற மங்கை எனும் பெண் பாத்திரம் வலம் வருகிறது. மங்கை இக்கதையில் உயர்கல்வி படித்துமுடித்த பட்டதாரியாக நிலைபெறுகிறாள். இக்கதையில் மங்கையால் வெளிப்படும் அன்பும் பண்பும் பெரியவர்கள் மீதுள்ள மரியாதை போன்றவை அவளின் கல்வி நிலை வெளிப்படுகிறது. கற்ற கல்விக்கு ஏற்ப தன் வாழ்க்கையில் நிற்கிறாள் மங்கை.

> "உன்னையும் உன் அண்ணன்களையும் படிக்க வைக்கணுமே! என்ன செய்வாங்க? அதனால கண்ணுக்கும் காதுக்கும் மட்டுமில்ல தன் உணர்வுக்கும் சேர்த்துத் தானே பூட்டுப் போட்டுக் கிட்டாங்க. உங்களுக்காக அப்பாகிட்டேயும் பெரிமாகிட்டேயும் அசிங்கப்பட்டாங்க... அவமானப்பட்டாங்க... உங்க எல்லோரையும்

ஒரு வெறியில... விடாம வளர்த்து ஆளாக்குனாங்க... அவுங்க வாழ்க்கையைத் தியாகம் செய்து உங்க எல்லோரையும் பட்டதாரியா ஆக்கினாங்க..."

[இங்கே ஒரு கங்கை, பக்கம் 163]

இருப்பினும், பெரிதளவில் கதையில் மங்கையின் கல்வி நிலை வெளிப்படவில்லை என்றே சொல்லலாம்.

'**நெஞ்சில் உரமுமின்றி**' எனும் சிறுகதையில் வரும் வெண்மதி எனும் பெண் கதைப்பாத்திரம் கல்விக் கற்றுத்தரும் இடைநிலைப்பள்ளி ஆசிரியராக இக்கதையில் வலம்வருகிறார். கல்விக் கற்றுத் தருவதோடு இல்லாமல் மாணவர்கள் தவறான பாதையில் செல்லும் போது அவர்களிடம் இடிதுரைத்துத் திருத்தவும் அறிவுரையும் கூறச் செய்கிறாள். எடுத்துக்காட்டாக, அப்பள்ளியின் பெண் மாணவர்கள் கெக்டசு கார்டனுக்குச் சென்ற போது அங்கெல்லாம் செல்லக்கூடாது என்று இடித்துரைகின்றார். மேலும், இக்கதையில் வருகின்ற 'உமா, உசா, ஊர்வசி, ஊர்மிளா' எனும் நான்கு கதைப்பாத்திரங்களும் கல்வி நிலையில் சிறந்து விளங்குவது தெரிகின்றது. கதையாசிரியர், இவர்கள் நால்வரையும் கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்கும் பெண்ணாகப் படைத்துள்ளார். நால்வரும் தங்களின் அறிவால் தவறான இடத்திற்குச் சென்று மாட்டிக் கொள்ளாமல் கல்வி நிலையால் ஆபத்திலிருந்து தப்பிக்கின்றனர்.

"நீங்க மூனு பேரும் அந்தக் கெக்டஸ் கார்டனுக்குப் போனிங்கதானே!" அவனே தொடர்ந்தான். அந்த மூவரின் முக மாற்றத்தை வெண்மதி டீச்சருடன் உமாவும் உணராமல் இல்லை!

"அப்படியா! அங்க எதுக்குமா போறீங்க! அந்த இடத்துக்கெல்லம் பெண்பிள்ளைகள் போகக் கூடாது என்று நான் உங்ககிட்ட பலமுறை சொல்லி எச்சரித்துள்ளேனே!" வெண்மதியின் கணீர் குரலில் கடுமை தெரிந்தது.

[நெஞ்சில் உரமுமின்றி, பக்கம் 185]

இத்தொகுப்பில் இறுதி கதையாக அமைக்கப்பட்டிருக்கும் **'இருபது ரிங்கிட்'** எனும் கதையிலும் பெண்ணின் கல்வி நிலை வெளிப்பட்டுள்ளது. பாரதி எனும் ஒரு பெண் ஆசிரியை இக்கதையில் முக்கியப் பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். கபிலன் என்றவோர் அலட்சியமான மாணவனை தனது ஆழ்ந்த கற்றல் கற்பித்தலால் ஐந்தாண்டு கழித்தும் அவனை மாற்றி நல்வழிப்படுத்தியுள்ளது. இஃது அந்த ஆசிரியரின் கல்வி நிலையைக் காட்டுக்கின்றது. முறையாக மாணவனின் திறமை அறிந்து கற்பிக்கும் ஒருவரே உண்மையான ஆசிரியர் என்று கபிலன் வழியும் ஆசிரியர் பாரதி வழியும் நமக்கு உணர்த்தியுள்ளார், கதையாசிரியர்.

"புகுமுக வகுப்பில் அவனுக்குக் கலைக்கல்வி போதித்த ஆசிரியை பாரதிதான் அவர். அவனுக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியை.

அவனுக்கு ஓவியத்தில் ஈடுபாட்டினையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியவர் அவர்தான்”

[இருபதி ரிங்கிட், பக்கம் 197]

“ஆசிரியை பாரதியை நினைத்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தவன் முதலில் தன்னுடைய பள்ளிச்சீருடையைத் தன் தங்கையிடம் கொடுத்துத் துவைக்கச் சொன்னான். அவளுக்கு ஆச்சரியம்! பின்னர்த் தன் காலணியையும் துவைத்து எஞ்சியிருந்த வெள்ளை நிற “பாலிசை” சுரண்டி அதில் பூசினான். நாளைப் பள்ளிக்குப் புதிதாய்ப் போக அவனுள்ளம் முதன் முதலாய் ஆசைப்பட்டது. மறுநாள் விரைவாக எழுந்து சுத்தமாய்ப் பள்ளிக்குச் சென்றான்.”

[இருபதி ரிங்கிட், பக்கம் 198]

முடிவுரை

சரசுவதி உலகன் எழுதிய ‘நீயின்றி மெய்ப்படுமோ’ சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 20 கதைகளில் 12 கதைகளில் பெண்களின் கல்வி நிலை வெளிப்பட்டுள்ளன. கதையாசிரியர் பெரும்பாலும், கதைகளில் பெண்களையே முக்கியக் கதைப்பாத்திரமாக வாசகர்களுக்குப் படைத்துள்ளார். பெண்களின் கல்வி நிலை வெளிப்பட்டுள்ள 12 கதைகளில் வெவ்வேறு நிலைகளில் பெண்களின் கல்வி நிலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் கல்வித் தகுதியிலும் கல்வி நிலையிலும் வேறுபட்டுக் காண்கின்றனர். பெண்களுக்குக் கல்வி என்பது மிகவும் அவசியம் என்று இந்தச் சிறுகதைத் தொகுப்பு ஆய்வின் வழி நமக்கு உணர்த்துகிறது. எதிர்கால ஆய்வாளர்கள், இந்தச் சிறுகதைத் தொகுப்பை பெண்ணியச் சிந்தனை அடிப்படையிலும் வேறு கோணங்களிலும் ஆய்வு செய்யலாம்.

துணைநூற்பட்டியல்

Krishanan. (2020). அண்மைக்கால மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் செல்நெறிகள் (Trends of recent Malaysian Tamil short stories). *Journal of Indian Studies (இந்திய ஆய்விதழ்)*,6-19.

Parvati. (2018). பாரதிதாசனின் பெண்கல்விச் சிந்தனையும் இன்றைய பெண்களின் கல்விச் சிந்தனையும் ஓர் ஆய்வு. (Bharathidasan's idea on women's education and today's women's idea of education: a study.). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, 89-99 .

Saraswathi. (2023). *Nee Indri Meippadumo (Collection of Short Stories).* Perak: Vinnoli Publications.

Saravanan & Manonmani Devi. (2019). சரசுவின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனை (Feminism in the short stories of Sarasu). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, 32-42.

Syed Peer Mohammed . (1999). *Verum Vazhvum.* Batu Caves: Muhil Enterprises.

Syed Peer Mohammed . (2001). *Malaysia Tamilarkalin Vazhvum Ilakkiyamum.* Batu Caves: Muhil Enterprises.

Veeramohan & Manimangai. (2020). மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் 2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சிறுகதைகளில் காணப்படும் கருப்பொருள்கள்: ஒரு பார்வை (Themes highlighted in Malaysia and Singapore short stories from year 2000 to 2009: A review. *Journal of Valartamil*, 84-98.

Vijayalatchumy & Navin. (2020). மலேசியாவில் தமிழ் சிறுகதை வரலாறும் அதன் காலவரிசை பகுப்பும் (History of Malaysian Tamil Short Stories and its Chronology). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, 104-118.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

‘கவித்தூறல்’ மலேசிய மரபு கவிதைத் தொகுப்பில் காணப்படும் சமூகத்திற்கான கல்விசார் விழிப்புணர்வுப் பதிவுகள்

The Educational Awareness Thoughts for the Community in 'Kaavithooral' Anthology of Malaysian Traditional Poetry

சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் / Sharan Suklam Ahtma Lingam [1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R Annamalai[2]

[1]M. Ed Research Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author’s Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

மனிதச் சமுதாயத்தின் வளர்ச்சியின் அடித்தளமாக அமைந்து நன்மை தீமைகளை அறிந்து நடக்கவும் தாம் கொண்ட அறிவைப் பிறருக்குப் பகிரவும் கல்வியானது துணைப்புரிகின்றது. ‘கவித்தூறல்’ எனும் மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 136 கவிஞர்களின் கவிதைகளுள் கல்விசார்ந்த விழிப்புணர்வைச் சமுதாயத்திற்குப் புலப்படுத்தும் கவிதைகளைக் கண்டறிந்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நூலில் இடம்பெற்ற அனைத்துக் கவிதைகளும் இந்த ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்நூலில் பாடப்பட்ட கவிதைகளில் பதின்மூன்று கவிதைகள் தமிழச் சமூகத்தினரிடையே காணப்படும் கல்விசார் விழிப்புணர்வைக் கொண்டுள்ளது. கல்விக்குத் மலேசியத் தமிழச் சமுதாயம் வழங்கிய முக்கியத்துவம், மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் நிலையும் விழிப்புணர்வும் தாய்மொழிக் கல்வியின் அவசியம் என இக்கட்டுரையில் பகுப்பாய்வு செய்து ஆய்வுக் கண்டு பிடிப்புகள் ஆராயப்பட்டன. மலேசியத் தமிழ்க்கவிதைகளில் சமூகத்திற்கான கல்விசார் விழிப்புணர்வுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கருச்சொற்கள்: கவித்தூறல், மலேசிய இலக்கியம், தமிழ்க்கவிதை, கல்விசார் விழிப்புணர்வு, சமுதாயம்

Abstract

Education serves as the foundation for the development of human society, helping individuals distinguish between good and bad and share their knowledge with others. This research article aims to identify and analyze poems that raise educational awareness within the community, from the anthology "Kavithooral," which features 136 poets from the Malaysian Tamil community. All the poems in this anthology were utilized for this study. Thirteen of the poems specifically highlight educational awareness among the Tamil community. The article examines the importance placed on education by the Malaysian Tamil community, the status and awareness of Malaysian Tamil schools, and the necessity of mother-tongue education. The study reveals the presence of educational awareness themes in Malaysian Tamil poetry aimed at benefiting society.

Keyword: Kavithooral, Malaysian Literary, Tamil Poetry, Educational Awareness, Society

முன்னுரை

மனித இனத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்து நன்மை தீமைகளை அறிந்து நடக்கவும் தாம் கொண்ட அறிவைப் பிறருக்குப் பகிரவும் பெருக்கவும் கல்வியானது துணைப்புரிகின்றது. கல்வியானது அறிவைப் பெறுவதற்கு மட்டுமே பயன்படும் அல்லது செயல்படும் பொருளல்ல. வாழ்க்கையை வாழ்வதற்கும் அதன் இன்றியமையாமையை உணர்வதற்கும் பயன்படும் தூண்டுகோலாகவே கல்வியானது திகழ்கிறது (ஈசுவரமூர்த்தி, 1966).

அதோடுமட்டுமில்லாமல், சிறந்த முறையில் வளமாகத் தன் வாழ்க்கையை வாழவும் வாழ்வில் எழும் சிக்கல்களைத் தீர்வு காணவும் உடல், உள நலத்தொடு அடிப்படைத் தேவைகளைப் பெறவும் குடும்பத்தைக் காக்கவும் சமூகத்தில் பிறரொடு பொருந்தி வாழவும் இக்கல்வியானது பயன்படுகின்றது என்று கூறப்படுகின்றது. இக்கூற்றுப்படி நோக்கினால், தன்னை மட்டும் தற்காக்காது தன்னைச் சுற்றியுள்ள குடும்பம், சமுதாயத்தையும் காத்து மேன்மையுறச் செய்யும் தன்மையைக் கல்வியானது பெற்றிருக்கின்றது என்பது புலப்படுகிறது (சந்தானம், கௌரிநாதன், & கணபதி, 2010).

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(குறள் 397)

என்ற குறளில் சொல்லப்பட்டது போல, கற்றவனுக்குத் தன் நாடு போல வேறு எதுவாயினும் நாடாகும். கற்றவனை எத்திக்குள்ளோரும் தங்களுள் ஒருவராகப் போற்றும் நிலையிருக்க ஒருவர் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்? என்ற கேள்வி எழுகிறது (வரதராசன், 2004). இதுபோன்ற கல்வியியல் விழிப்புணர்வுடனேயே கவித்தூறல் மலேசிய மரபு கவிதைத் தொகுப்பில் பதின்மூன்று கவிதைகளில் சில வரிகள் தோன்றியுள்ளன.

'கவித்தூறல்' மலேசிய மரபு கவிதைத் தொகுப்பின் அறிமுகம்

கவித்தூறல் மரபு கவிதைத் தொகுப்பானது மலேசியத் தமிழ மக்களின் நெடுநாள் காத்திருப்பிற்குப் பின் வெளியிடப்பட்ட தனித்ததொரு மரபு கவிதைத் தொகுப்பாகும். மலேசிய வாழ்கவிஞர் 136 நபரை உள்ளடக்கி அவர்களது தற்குறிப்போடு அவர்களது கவிதைகளை உள்ளடக்கி வெளியீடு கண்டுள்ளது இந்நூல். பல்வேறு பாடுபொருள்களில் யாத்த கவிதைகளைக் கொண்டு பல அரிய கருத்துகளையும் சமுதாயப் பார்வையையும் இந்நூல் கொண்டுள்ளது. புதிய கவிஞர், மூத்த கவிஞர், மறைந்த கவிஞரென முப்பெரும் பிரிவுகளாக இந்நூல் மனோன்மணி தேவி முத்து. ஆறு. அண்ணாமலை அவர்களாலும் சரசுவதி உலகன் அவர்களாலும் 2020ஆம் ஆண்டு தொகுக்கப்பெற்றுள்ளது (சரண் சுக்லாம் & மனோன்மணி தேவி, 2022).

தரவுப் பகுப்பாய்வு

கல்விக்குத் மலேசியத் தமிழச் சமுதாயம் வழங்கிய முக்கியத்துவம்

தோட்டப்புறத்தில் குடியமர்த்தி, சஞ்சிக் கூலிகளாய் நம் முன்னோரை மலாயா என்றழைக்கப்பட்ட மலேசியாவில் துன்பப்படுத்திய வேளையிலும் விழிப்போடு தத்தம் பிள்ளைகளை முடிந்த மட்டும் கல்விகற்றுச் சிறந்திட முனைப்புக்காட்டிய பெற்றோரை நம் தமிழ்ச்சமூகம் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மனம் படைத்தோரது கருத்துகளைத் தாங்கிச் சில கவிதை வரிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. முதலில்,

படிப்பதனைத் துறந்தோனின் பாவநிலை கண்டு
படியளக்க இயன்றமட்டும் பாடுபடு கின்றோம்!
(மனிதமுள்ள தமிழினம், பக். 354)

என்ற ஹரிராஸ்குமார் ஹரிஹரனின் வரிகளில் தோட்டப்பாட்டாளியின் நிலையும் அவனது குடும்பத்தில் சூழ்நிலை நிமித்தம் கல்வியைப் பெறாது உழைத்தவரின் பாவ நிலையைப் பற்றியும் அவன் வாழ்வதற்கு உணவு சமைக்கப் பொருளீட்டும் முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது. அன்றைய காலத் தமிழ மக்களில் பெருமளவினர் பாட்டாளிகளாய் இருந்தமையால் அவர்களது வாழ்க்கை முறை அத்தகைய துன்பத்தோடு அமைந்துள்ளது என்று அறிய முடிகின்றது. ஆனால், இவ்வரிகளில் படிப்பினைத் துறந்தோர் என்ற சொல்லாட்சி கல்வியின் முக்கியத்துவத்தை அக்காலம் தொடங்கித் தமிழ மக்களின் வாழ்வில் இருந்துள்ளதைப் புலப்படுத்துகிறது. மேலும்,

கல்வியிலே உயர்வதென்றே குறியாய்க் கொண்டு
கட்டொழுங்கும் நற்பண்பும் பேணல் வேண்டும்
(சான்றோனாய் வாழ்க!, பக். 361)

என்ற மனோன்மணி தேவியின் கவிதை வரிகள் தெரிவிப்பதாவது, தமிழச் சமுதாயத்தின் கல்விசார் எதிர்ப்பார்ப்புகளில் முக்கியமானது ஒழுக்கமும் நற்பண்புமாகும். அதாவது, கல்வி கற்பது மாணவரை அறிவில் மட்டும் சிறந்தவனாய் உருமாற்றாது அவனை ஒழுக்கத்துடனும் நற்பண்புடன் உருமாற்றும் என்ற நம்பிக்கையை நம் இனத்தவர் கொண்டிருக்கின்றனர் என்று இதன்வழி அறியமுடிகின்றது. தீயப்பழக்கங்களில் ஈடுபடாது, பிறரிடம் ஏமாறாது, நல்ல தொழிலில் நிறைந்த பட்டறிவோடு இருந்தால் மட்டுமே நம்மினத்தை உயர்த்த முடியும் என்று அக்காலம் தொடங்கி இன்று வரை எண்ணி அதற்கேற்ற சரியான வழியாகக் கல்வியின்பால் முக்கியத்துவத்தை வழங்கி வந்துள்ளனர் என்ற தெரியவருகிறது.

மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் நிலையும் விழிப்புணர்வும்

சமுதாயத்தில் கல்வியின் விழிப்புணர்வை உறுதிப்படுத்துவதில் மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் நிலையை அறிதலும் அதுசார்ந்த விழிப்புணர்வைக் கொண்டிருத்தலும் இன்றியமையாதது. மலேசிய நாட்டில் தமிழ மக்களுக்கென்று தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட தொடக்கப்பள்ளிகள் காலனித்துவ ஆட்சியின் போதே தொடங்கப்பட்டு இன்றுவரை

தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. முதன்மைத் தொடர்புமொழியாகத் தமிழை இப்பள்ளிகள் கொண்டிருக்கின்றன (சாமிக்கண்ணு ஜெபமணி, கிங்ஸ்டன் பால்தம்புராஜ், 2018). தமிழ்வழிக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இப்பள்ளிகளில் வழங்கப்பட்டிருந்தாலும் பெரும்பான்மையான தமிழ மக்கள் தங்களின் பிள்ளைகளை இத்தொடக்கப்பள்ளிகள் அனுப்புவது கிடையாது. குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கையிலேயே ஒவ்வோர் ஆண்டும் மாணவரது எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது (இராஜேந்திரன், 2008). இத்தமிழ்ப்பள்ளியின் நிலையையும் அதுசார்ந்த விழிப்புணர்வையும் நாம் கவித்தூறல் கவிதைகளில் காணமுடிகின்றது. அவற்றுள்,

கல்வியிலே தமிழ்ப்பள்ளி தரமுயர்ந்து நிற்குதுண்ணே!
எல்லோரும் தம்பிள்ளை தமிழ்ப்பள்ளி அனுப்புகின்றார்!
(என் கதையைக் கேளுங்கண்ணே – இன்றும் நாளையும், பக். 259)

என்ற கிரு. முகிலரசனின் வரிகள் தற்காலத் தமிழ்ப்பள்ளியின் நிலையையும் எதிர்காலத்தில் அவர் தமிழச் சமுதாயத்தின் மீது கொண்ட எதிர்ப்பார்ப்பையும் காட்டுகிறது. பிற மொழித் தொடக்கப்பள்ளிகளைக் காட்டிலும் தமிழ்ப்பள்ளி மாணவரது தரமும் சாதனையும் சிறந்துள்ளது இதன்வழி அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே, பலரும் தங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப்பள்ளியில் சேர்ப்பது அதன்வழி இனி நடக்கவிருக்கும் எதிர்கால வினையாகக் கவிஞர் எழுதியுள்ளார். மேலும்,

தாய்மண்ணிலே ஏதிலியாய் நிற்கின்றோம்!
தாய்க்கல்வி காக்கக்கூவி விற்கின்றோம்!
(ஏனிந்த அவலநிலை?, பக். 320)

என்ற சரவணன் இராமச்சந்திரன் கவிதை வரிகளும்

நம்பிள்ளை களைவிடுப்போம் தமிழ்ப்பள்ளி;
நற்றமிழால் வீழ்ந்தவர் எவருமில்லை!
(உரக்கக் கூறுக தமிழினமே!, பக். 338)

என்ற செ. மோகன் குமாரின் கவிதை வரிகளும் தமிழ்ப்பள்ளியின் இன்றைய நிலையையும் தமிழ்ப்பள்ளியைத் தெரிவு செய்வதற்குத் தமிழார்வலர் படும் துன்பத்தையும் எடுத்துரைக்கின்றன. தமிழைத் தெரிவு செய்து படித்தவர் வீழ்ந்த கதை இல்லையென்று தமிழைப் படித்தோர் எவரும் எங்கும் வாழலாம் என்று கவியியற்ற இரு தமிழ்க்கல்வியாளரது கருத்தானது குறிப்பிடத்தக்கது. இவற்றைத் தமிழ்ப்பெற்றோர் நன்கறிய வேண்டும்.

தாய்மொழிக் கல்வியின் அவசியம்

தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை மலேசியத் தமிழருக்கு எடுத்துரைக்கும் நோக்கில் சில கவிதை வரிகள் எழுதப்பெற்றுள்ளது. அவற்றில்,

ஆங்கிலக் கல்விக்கே முதலிடம் தமிழில்
ஆங்கே பேசிடின் பெருங்குற்றம்!
ஓங்கியே அறைந்தால் செவிப்பறை கிழியும்
ஒடுங்குவ தோநம் கடுஞ்சேற்றம்?
(வெட்கமடா வெட்கம், பக்.105)

என்ற எல்லோனின் வரிகள் மலேசியச் சூழலோடு தமிழ்நாட்டுச் சூழலையும் தொட்டே எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். தாய்மொழிக் கல்வியைத் தெரிவு செய்யாது ஆங்கில, மலாய், சீனம் போன்ற பிற மொழிப் பள்ளிகளில் தங்களது பிள்ளைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் தமிழ மக்கள் வேற்றுமொழி மோகத்தால் தடம்புரள்வதும் அப்பிறமொழியில் தன் பிள்ளை சிறந்திட முழுநேரமும் அம்மொழியை வீட்டுப் பயன்பாட்டில் திணிப்பதும் நம்மொழிக்கு நாமே செய்யும் தீங்காகும் என்பதை உணர மறுக்கின்றனர். மொழி வழியே இனமும் பண்பாடும் காக்கப்படும் என்பதை நம் சமூகம் மறப்பதும் இதன்வழி அறியப்படுகிறது. அதோடு,

தமிழ்பேசத் தெரியாதார் மூங்கையரா மென்று,
தமிழறிஞர் மொழிவதனைக் கேட்டறிந்த பின்னும்,
இமியளவும் மொழியுணர்வே அற்றவராய் இருந்தால்
எப்படித்தான் தமிழ்ப்பள்ளி எண்ணிக்கை கூடும்?
(தமிழ்ப்பள்ளியே நம் தேர்வு, பக். 149)

என்ற ம. தமிழன்பனின் இக்கவிதையில் நாம் மொழியுணர்வைச் சிறிதளவு நம் சமுதாயம் கொண்டிராமல் இருந்தால் எவ்வழியில் மலேசியாவின் மூவகைத் தொடக்கப்பள்ளிகளுள் ஒரு வகையான தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கையானது கூடும் என்ற கேள்வியை உணர முடிகின்றது. மொழியுணர்வு மிக்கச் சமுதாயத்திற்கான கல்வியை வழங்க அச்சமுதாயத்தின் தாய்மொழிக் கல்விக்கே பெருமளவு பங்குண்டு. தாய்மொழிக் கல்வியின் அவசியம் அறியாதோர் பெருகிட, தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை குறையும். தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்திட, தமிழ்ப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர், அலுவலர், இன்னும் பிற பணியாளர் எண்ணிக்கையும் குறைவதோடு.

இதனால், நமது சமுதாயத்தின் பொருளாதார நிலையும் தகுந்த மாற்றத்தைக் காணும் என்பது திண்ணம். இச்சிக்கலின் ஆணிவேர் தாய்மொழிக் கல்வியின் விழிப்புணர்வில் தொடர்கிறது. எனினும், இவ்வாண்டில் 527 தமிழ்ப்பள்ளிகளிலிருந்து 530 தமிழ்ப்பள்ளிகளாக எண்ணிக்கையில் உயர்வு கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பல பள்ளிகளில் குறைந்த அளவிலான மாணவர் எண்ணிக்கையை இன்றுவரை கணக்கிடப்பட்டுள்ளது.

முடிவுரை

சுருங்கக்கூறின், இந்தக் ‘கவித்தூறல்’ என்ற மலேசிய மரபு கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளுள் கல்விசார்ந்த விழிப்புணர்வைச் சமுதாயத்திற்குப் புலப்படுத்தும் கவிதை வரிகள் பல கவிஞர்களால் படைக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வின் வழி

கண்டறியப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெற்ற அனைத்துக் கவிதைகளும் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்நூலில் பாடப்பட்ட கவிதைகளில் பதின்மூன்று கவிதைகள் தமிழச் சமூகத்தினரிடையே காணப்படும் கல்விசார் விழிப்புணர்வைக் கொண்டுள்ளது. கல்விக்குத் மலேசியத் தமிழச் சமுதாயம் வழங்கிய முக்கியத்துவம், மலேசியத் தமிழ்ப்பள்ளிகளின் நிலையும் விழிப்புணர்வும் தாய்மொழிக் கல்வியின் அவசியம் என இத்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைவரிகள் முறையாகப் பகுத்தாயப்பட்டுள்ளன. மலேசியத் தமிழ்க்கவிதைகளில் சமூகத்திற்கான கல்விசார் விழிப்புணர்வுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

Arulnathan, V. (2019). Kalviyil Aaraaychi: Or Arimugam. Perak: Malaysian Teachers Education Institute Ipoh.

Rajendran, N. S. (2008). Aasiriyam - Malaisiyavil Tamizh Kalviyum Kattral Karppiththalum. Kuala Lumpur: Uma Publications.

Eswaramoorthy, V. (1966). Kalvi - Oru Mathippeedu. Chennai: Sinthanai Publications.

Kanimozhi. (2023). Thirukkural Eliyaurai. Ipoh: Tamizhkani Vaniga Nilayam.

Santhanam, E., Gowrinathan, T., & Ganapathy, V. (2010). Kattral Karppiththal Podhu Muraigal. Chennai: Shantha Publications.

Sharan Suklam, A., & Manonmani Devi, M.A.R. (2022). Kavithooral Malaisiyath Tamizh Kavithai Thoguppil Iyarkkai Kaadhal. Pranav Tamil Studies Journal (Special Issue), 229-234.

Samikkannu Jebamani, Kingston Balthamburaj. (2018). Malaisiyath Tamizh Kalvi Varalaru. Chennai: International Institute of Tamil Studies

Singaravelu, S. (2014). Thirukkural Porulurai. Kuala Lumpur: Uma Publications.

Manonmani Devi, A., Sarasvathy, U. (2020). Kavithooral. Kuala Lumpur: Uma Publications.

Varadarasan, M. (2004). Thirukkural Thelivurai. Chennai: Saiva Siththantha Noorpathippu Kazhagam.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் உத்திகள்

Teaching Strategies for Students Learning Tamil as a Second Language

மலர்விழி ஜெகநாதன் / Malarvili Jaganathan[1]

[1]Ph.D Research Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author's Email: jmalarvili88@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழி கற்றுக்கொடுக்கப்படுகிறது. முற்றிலும் வேற்று மொழியாகக் கற்பிக்கப்படும் இவ்விரண்டாம் மொழியைக் கற்பிக்க அப்பாடத்தின் ஆசிரியர்கள் சில வழிமுறைகளைக் கையாளுகின்றனர். அவ்வகையில் இந்த ஆய்விற்குச் சிலங்கூரில் அமைந்துள்ள தேசியத் தொடக்கப்பள்ளிகளில் முழு நேர ஆசிரியராகப் பணிபுரியும் ஐந்து ஆசிரியர்களை இவ்வாய்வுக்கு உட்படுத்தி அவர்கள் பயன்படுத்தும் வழிமுறைகளை அறிந்துகொள்ள இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின்வழி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் சில வழிமுறைகளைப் பகிர்ந்துகொண்டனர். அவை, எழுத்துமுறை கற்பித்தல், கேட்டல்வழி கற்பித்தல், விளையாட்டுவழி கற்பித்தல், பாடல்வழி கற்பித்தல், மின் அட்டைவழி கற்பித்தல் எனும் ஐந்து வழிமுறைகள் அடங்குவன. இவ்வழிமுறைகள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க மிகவும் துணைப்புரிகின்றன என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரிடமிருந்து எடுக்கப்பட்ட நேர்காணல்வழி அறியமுடிகிறது.

கருச்சொற்கள்: இரண்டாம் மொழி, தொடக்கப்பள்ளி, வழிமுறைகள்

Abstract

This study aims to teaches Tamil as a second language to students whose mother tongue is not Tamil in primary schools. The teachers used a few methods to teach this second language, which is taught as a completely it's a different language for the students. Thus, for this study, five teachers working as full-time teacher in primary schools located in Selangor were subjected to this study to know the method they used for their teaching. The teachers surveyed through this study shared some guidelines. They include five methods namely written teaching, listening teaching, playing method in teaching, singing teaching and e-cards teaching. It can be seen from the interview that these methods are very helpful in teaching Tamil as a second language.

Keywords: Second language, Primary School, Method

முன்னுரை

1816இல் பினாங்கு இலவசப் பள்ளியில்தான் மலேசியாவில் தமிழ்க்கல்வி தொடங்கியது (ராஜேந்திரன், என். எஸ்., 2011). ஆனால், இது நிலைக்கவில்லை. பிறகு, சிங்கப்பூரில் சிங்கப்பூர் இலவசப் பள்ளியில் தமிழ் மொழிப் பாடம் ஒரு பிரிவாகத் தொடங்கப்பட்டது. ஆனால், அதுவும் பின்னாளில் மூடப்பட்டுவிட்டது. இவ்வாறே 1970களில் பினாங்கு, மலாக்கா, ஜொகூர் போன்ற மாநிலங்களில் தமிழ்ப்பள்ளிகள் நிருவப்பட்டன (ராஜேந்திரன், என்.எஸ்., 2008). ஆங்கில அரசு நிறைய தமிழ்ப்பள்ளிகளைத் தோற்றுவிக்கவில்லை. 1900இல் மைல்கல்லாகப் பேரா மாநிலத்தின் பாகான் செராயில் முதல் முயற்சியாக அரசினர் தமிழ்ப்பள்ளி நிருவப்பட்டது. 1930களுக்குப் பிறகு நில நெருக்குதல்களால் ஆங்கிலேய அரசு தமிழர்கள் வாழும் இடங்களில் அதிக எண்ணிக்கையில் தமிழ்ப்பள்ளிகளைக் கட்டியது. இவ்வாறு 1957 விடுதலையின் பொழுது இம்மண்ணில் 888 தமிழ்ப்பள்ளிகள் மூலமாகத் தமிழ்மொழி வளர்ந்துவந்தது.

1956இல் இரசாக் அறிக்கை, தமிழ்மொழி தாய்மொழிப் பாடமாகவும் கற்பிக்கப்பட வழிவகுத்தது. மேலும், கல்விச் சட்டம் 1957இன்படி, தேசியப் பள்ளிகளில் பயிலும் 15 மாணவர்களின் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால் தமிழ்மொழி பாடமாகக் கற்பிக்கப்படும் என்ற சட்டமும் அமல்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பல தடைகளைக் கடந்து பலரின் விடா முயற்சியின் பலனாகத் தமிழ்மொழி இன்று வரை மலேசியாவில் வாழ்ந்து வருகின்றது. தமிழ் மாணவர்களுக்கு மட்டுமின்றித் தமிழர் அல்லாத மாணவர்களும் தமிழைக் கற்கத் தொடக்கப்பள்ளிலும் இடைநிலைப்பள்ளிகளிலும் வழிவகை செய்யப்பட்டது. இதற்கென ஆசிரியர்களும் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

இவ்வகையில், தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளிகளிலும் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பல வழிமுறைகளைக் கையாண்டு கற்றல் கற்பித்தலை மாணவ மாணவிகளைக் கவரும் வகையிலும் அவர்களுக்குப் புரியும் வகையிலும் நடத்துகின்றனர்.

ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் நோக்கமானது;

2.1 தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் உத்திகளைக் கண்டறிதல்.

2.2 தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் உத்திகளின் பயன்பாட்டினை அறிதல்.

ஆய்வு நெறிமுறைகள்

சிலாங்கூர் மாநிலத்தில் அமைந்துள்ள தேசியப்பள்ளியில் இவ்வாய்வு நடத்தப்பட்டது. இஃது ஒரு விளக்க முறையில் அமைந்த பண்புசார் ஆய்வாகும். ஆய்வு நடத்தப்பட்ட தேசியப்பள்ளியில் தமிழ்மொழி பாடத்தினை முழு நேரப் பாடமாகக் கற்பிக்கும் இரு

ஆசிரியர்கள் விளக்கமுறை ஆய்வு வடிவமைப்பிற்கு உட்படுத்தப்பட்டனர். அவ்விரு ஆசிரியரும் பெண்களே ஆவர். தங்களின் பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும் உத்தி முறைகளைப் பற்றி விளக்கமுறையில் கேள்விகள் எழுப்பப்பட்டன. அதற்கான பதில்கள் தொகுக்கப்பட்டுக் கீழே வழங்கப்பட்டுள்ளன.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

எழுத்துமுறை கற்பித்தல்

தமிழ் நெடுங்கணக்கில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்தென நால்வகை எழுத்துகள் உள்ளன. ஒவ்வோர் எழுத்துக்கும் தனித்தனியே ஒலிகள் உண்டு. எனவே, எழுத்துகளை முதலில் கற்பித்து, அதன் பின்னர் அவ்வெழுத்துக்களாலான சொற்களையும் சொற்றொடர்களையும் வாசிப்பதே எழுத்து முறை வாசிக்கக் கற்பித்தலாகும்.

மாணவர்களுக்கு 'ப' எனும் எழுத்தைக் கற்பிக்க, முதலில் ஆசிரியர் 'ப' எனும் எழுத்தில் தொடங்கும் சொற்களை அறிமுகப்படுத்தி மாணவர்களை உச்சரிக்கச் செய்ய வேண்டும்.

காட்டு : 'ப' + ல் = பல்

: 'ப' + டை = படை

இவ்வாறு 'ப' எனும் எழுத்தில் தொடங்கும் சில சொற்களை ஆசிரியர் அறிமுகப்படுத்தி மாணவர்களுக்கு உச்சரிக்கக் கற்பிப்பர். பின்னர், மாணவர்களையே சுயமாக 'ப' எனும் எழுத்தில் தொடங்கும் சில சொற்களைக் கூறச் செய்வர். எழுத்துகளை முறைப்படி படிப்பதால் அவற்றின் வரிசை முறையை மாணவர்கள் நன்குணர்ந்துகொள்ள வழி ஏற்படுகின்றது. அதனால், மாணவர்கள் எளிதில் மொழியைக் கற்க இயலும்.

கேட்டல்வழி கற்றல் *(Audiolingual)*

கேட்டல்வழி கற்றல் என்பது தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உகந்த ஒரு முறை என்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். கேட்டல்வழி கற்றலின் மூலம் மாணவர்களின் கேட்டல் திறனையும் கேட்டவற்றைக் கேட்டபடியே ஒப்புவிக்கும் திறனையும் மேம்படுத்த முடியும். ஆசிரியர் தானே நேரடியாகக் குறுகிய வசனங்களைப் பேசியோ பதிவு செய்து வானொலியில் ஒலிக்கச் செய்தோ மாணவர்களின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்கலாம்.

எடுத்துக்காட்டாக, ஆசிரியர் சில உணர்ச்சிமிக்க வாக்கியங்களைக் கோர்வையாக மாணவர்களிடம் ஒப்புவித்தப் பிறகு மாணவர்களைத் தன்னைப் போலவே அவ்வாக்கியத்தை ஒப்புவிக்கப் பணிக்கலாம். இம்முறையைக் கையாளும்பொழுது வாக்கியங்கள் சுருக்கமாக இருப்பதை ஆசிரியர் உறுதிச் செய்தல் அவசியம். மாணவர்கள் தாங்கள் கேட்ட

வாக்கியங்களைப் பேச்சு மூலமாகச் சொல்லும்பொழுது ஆசிரியர் மாணவர்களின் உச்சரிப்பைக் கவனித்துப் பிழைகள் இருப்பின் உடனுக்குடன் திருத்த இம்முறை வழிவகுக்கும். மாணவர்கள் வாக்கியங்களைப் பேசிப் பார்த்து மனனம் செய்த பிறகு, அவ்வாக்கியங்களைக் கொண்டு வகுப்பின் முன் நாடகம் நடித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வகுப்பை உயிரோட்டமாக நடத்த இயலும் என ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

விளையாட்டு முறை

விளையாட்டு முறையைக் கையாண்டு தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பது மட்டுமல்லாது. மிகுந்த பலமைத் தரக்கூடிய ஒரு முறையாகவும் அமைகிறது என ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் குறிப்பிட்டனர். இவ்வுத்தியின்வழி, மாணவர்கள் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்பதை உறுதி செய்ய முடிகிறது. அதுமட்டுமின்றி, மதிய வேளையில் நடைபெறும் வகுப்பில் மாணவர்கள் சோர்வுடனும் தூக்கத்துடனும் காணப்படுவார்கள். அவ்வேளையில் இது போன்ற உத்தியைப் பயன்படுத்திக் கற்பிப்பது மாணவர்கள் தங்கள் சோர்வை நீக்கிப் புத்துணர்ச்சியுடனும் ஆர்வத்துடனும் கற்றல் கற்பித்தலில் ஈடுபடத் துணைபுரிகின்றது.

எடுத்துக்காட்டாக, குறுக்கெழுத்து விளையாட்டைக் குறிப்பிட்டனர். இதில் ஆசிரியர் மாணவர்களுக்குச் சொற்களைக் கற்றுக் கொடுத்துவிட்டு, குறுக்கெழுத்துப் போட்டி நடத்தலாம். இதன்வழி மாணவர்கள் சொற்களை எழுத்துப் பிழைகளின்றிக் கற்பதை உறுதி செய்ய முடியும்.

அடுத்த விளையாட்டாக, இசைப்பெட்டி விளையாட்டைக் குறிப்பிடலாம். இசைப் பெட்டியில் ஆசிரியர் தமிழ் எழுத்துகளை வைப்பார். பிறகு, அப்பெட்டியை ஒரு மாணவர் இன்னொரு மாணவரிடம் கொடுப்பார். இசை நின்றவுடன் பெட்டியைக் கையில் வைத்திருக்கும் மாணவர் அதிலிருந்து ஓர் எழுத்தை எடுத்து அவ்வெழுத்தில் தொடங்கும் சொல்லைச் சொல்லி விளையாட்டைத் தொடர்வார். இவ்விளையாட்டின்வழி, மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் எழுத்தை அறிந்துள்ளனரா என்பதனை ஆசிரியர் கண்டுகொள்ள முடியும்.

தொடர்ந்து, பாவனைச் செய்யும் விளையாட்டு முறையை அவர்கள் குறிப்பிட்டனர். இவ்விளையாட்டு முறையில், மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்படுவர். பிறகு, இரு குழுவிலிருந்தும் முறையே ஒவ்வொரு மாணவரும் வகுப்பின் முன் வந்து பெட்டியில் உள்ள ஒரு குறிப்பை எடுத்து மௌனமாக வாசிப்பர். அதில், எழுதப்பட்டிருக்கும் சொல்லையோ சொற்றொடரையோ வாசித்துப் புரிந்து கொண்டு அம்மாணவர் செய்கை முறையில் பாவனைச் செய்வார். அவர் செய்யும் பாவனையைக் கொண்டு குழு மாணவர்கள் அச்சொல்லைக் கண்டு பிடிப்பர். அதிகச் சொற்களைச் சரியாகக் கண்டு பிடித்த குழு வெற்றி பெற்ற குழுவாக ஆசிரியரால் அறிவிக்கப்படும்.

பாடல் வழிக் கற்பித்தல்

தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் பாடல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பாடல்வழி கற்பித்தல் தமிழ்மொழியில் மாணவர்களின் உச்சரிப்பை வழுப்படுத்த உதவும் என்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். பிற மொழி கலப்பு இல்லாத தமிழ் பாடல்களை இம்முறையில் பயன்படுத்துதல் சிறப்பு. அதிலும், புது பாடல்களைக் கொண்டு கற்றல் கற்பித்தல் நடத்தினால் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவர்.

இவ்வகைக் கற்பித்தலில், ஆசிரியர் இசைத்தட்டைப் பயன்படுத்திப் பாடலை ஒலிப்பரப்பி மாணவர்களைக் கூர்ந்து கேட்க வைக்க வேண்டும். பிறகு, மாணவர்களைப் பாடலோடு இணைந்து பாட வைக்கலாம். ஆசிரியர்கள் இந்நடவடிக்கைக்குப் பயன்படுத்தும் சில பாடல்கள்;

i. தாளம் திரைப்படத்தின் ‘கலை மானே உன் தலை கோதவா’ பாடல்
ii. பீமா திரைப்படத்தின் ‘முதல் மழை எனை நனைத்ததே’ பாடல்
iii. காதலர் தினம் திரைப்படத்தின் ‘என்ன விலை அழகே’ பாடல்
iv. ரிதம் திரைப்படத்தின் ‘காற்றே என் வாசல் வந்தாய்’ பாடல்

போன்ற முழுமையாக நல்ல தமிழ் சொற்களைத் தெளிவாகப் பயன்படுத்தி எழுதப்பட்ட பாடல்களைத் தெரிவு செய்தால் சிறப்பு. அதனை அடுத்து, பாடல் ஒலிப்பரப்பை நிறுத்தி விட்டு ஆசிரியர் பாடலில் காணப்படும் சொற்களின் சரியான உச்சரிப்பு முறைகளை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துப் பாடல் ஒலிபரப்பு இல்லாமல் பாடச் செய்ய வேண்டும். உச்சரிப்புப் பிழைகள் இருப்பின், ஆசிரியர் உடனுக்குடன் மாணவர்களைத் திருத்திச் சரியான உச்சரிப்பைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இவ்வுத்திவழி, வகுப்பில் மகிழ்வான சூழலை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் மாணவர்கள் தமிழ் சொற்களையும் அதன் உச்சரிப்பு முறைகளையும் நினைவில் கொள்ள ஏதுவாகவும் இருக்கிறது என்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

முடிவுரை

சுருங்கக்கூறின், தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகத் தேசிய தொடக்கப்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடநூல்களையும், பயிற்சி நூல்களையும் மட்டுமே சார்ந்து கற்றல் கற்பித்தல் நடத்துவது தமிழ்மொழியின்பால் மாணவர்களின் ஆர்வத்தைக் குறைக்கக் கூடும். ஆகவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் மேலும் பல உத்திகளைக் கையாண்டு மாணவர்களைக் கவரக் கூடிய வகையில் கற்றல் கற்பித்தலை ஆசிரியர்கள் மேற்கொண்டால் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பதில் மாணவர்கள் ஆர்வம் காட்ட முனைவர்.

துணைநூற்பட்டியல்

Ghazali Yusri Abd Rahman, (2008). The Importance of Environment in Learning and Teaching. Kuala Lumpur: National University.

Norianti Binti Abdul Jaffar, (2010). Methods of Teaching Arabic as a Second Language. Kuala Lumpur: Putra University.

Ganapathi V. (2010). Methods of Teaching Classical Tamil (4 Volumes). Chennai: Santha Publishers.

Thamarai Sundararajan, (2003). Challenges in Learning and Teaching Tamil Language. Kuala Lumpur: University of Malaya.

Rajendran, N. S. (2008). Asiriyam: Tamil Education and Learning and Teaching in Malaysia. Kuala Lumpur: Uma Publications.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

இலகுவான வாசித்தல் முறை

Methods For Easy Reading

கோமதி செல்வராஜ் / Komathy Selvaraj[1]

[1]Teacher, SJK(T) Ladang Holyroad

*Corresponding Author's Email: s.komathykom@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

1983இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அமலாக்கத்தின் உள்ளார்ந்த அறிவைப் பற்றியும் அவ்வமயம் ஒவ்வொரு திறனைக் கற்பித்தலின் எவ்வாறு குறைநீக்கற் கற்பித்தல் வலியுறுத்தப்பட்டது என்பதைப் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கின்றது. கே.எஸ்.எஸ்.ஆர் (KSSR) எனும் பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள எட்டு (8) வாசிப்புத் திறன்களுள் இரண்டை மட்டும் இவ்வாய்வு மையப்படுத்துகிறது. வாசிப்பில் வலிவின்மையைக் களைய ஆய்வாளர் சில அணுகுமுறைகளைப் பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வணுகுறைகளால் 2.5 (புதிய சொற்களை வாசித்தலும் பொருள் அறிதலும்) 2.6 (பலதரப்பட்ட வாசிப்புப் பகுதிகளை வாசித்துப் புரிந்துகொள்ளல்) ஆகிய திறன்களில் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். இவ்வாய்வுக் கட்டுரையைத் தயாரிப்பதில் டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்களின் ஆய்வு பேருதுவியாக அமைந்திருந்தது. அவர் தம் ஆய்வில் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள ஐந்து முறைகளை வகுத்துள்ளார். அவை, எழுத்து முறை, சொல் முறை, பார்த்துச்சொல்லும் முறை, சொற்றொடர் முறை, கதை முறை ஆகும். இந்த ஆய்வு இலகுவான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டிய முறைகளைத் தொகுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரேழுத்தைக் கொடுக்கச் சொல் தேடுதல்; ஈரெழுத்துச் சொற்களைத் தேடுதல்; இரண்டு சொற்களால் எளிதான சொற்றொடரை உருவாக்குதல் போன்றவை. இறுதியாக, இந்த ஆய்வு பையப்பயிலும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த வெற்றி கண்டுள்ளது என்பது கண்டறியமுடிந்தது.

கருச்சொற்கள்: தொடக்கப்பள்ளி, இலகுவான வாசிப்பு முறைகள், மேம்படுத்துதல்

Abstract

This study aims to describes the background knowledge of the implementation of the new curriculum introduced in 1983 and how remedial teaching of each skill was emphasized at the time. This study focused on only two of the eight (8) reading skills defined in the KSSR curriculum. A few approaches are recommended to the researcher to overcome the problems in reading skills. These deficits can be improving skills in 2.5 (reading and understanding new words) and 2.6 (reading and understanding a variety of reading passages). Dr. Suppu Reddiyaar's research was instrumental in preparing this study. In his research, he lays out five methods for developing reading skills. They are writing skills, words skills, visual skills, phrase skills and story skills. This study summarizes the methods for performing with easier exercises. An example, searching for words to give monosyllables; searching for synonyms; like making a simple sentence with two words. Finally, it was found that this study was successful in improving students' reading skills in grade school.

Keywords: Primary school, Easier reading methods, improve

முன்னுரை

மொழித் திறன்கள் நான்கு. அவை கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவை ஆகும். மொழிக்கு முதல் கேட்டல் திறனாகும். கேட்பதை அடிப்படையாகக் கொண்டே குழந்தை பேசத் தொடங்குகிறது. பள்ளிக்கு வருவதற்கு முன்பே மாணவர்கள் கேட்கும், பேசும் ஆற்றலைப்பெற்று விடுகிறார்கள். வாசிப்புத் திறனும், எழுத்துத் திறனும் அப்படியல்ல அது திட்டமிட்டுக் கற்பிக்கப்பட வேண்டியவை.

கேட்டல் திறன் போல வாசித்தலும் ஒரு கொள்திறன் (RECEPTIVE SKILL) ஆகும். பேசுதல், எழுதுதல் ஆகிய ஆக்கத் திறன்களுக்கு (PRODUCTIVE SKILL) வாசிப்பு எனும் கொள்திறன் அத்தியாவசியமாகிறது. நாளடைவில் கேட்டல் திறனுக்குப் பதிலாக வாசிப்புத் திறனே ஒருவரின் அறிவாற்றலுக்கு மூலமாக அமைந்து விடுகிறது. இத்திறனை அடைந்த மாணவர்களிடையே எப்பொழுதும் வாசிக்கும் பழக்கம் இயல்பாகவே அமைந்து விடும் என்றால் மிகையாகாது.

வாசிப்பு என்பதற்குப் பல வரையறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொடக்கக் காலத்தில் வரிவடித்தை ஒலி வடிவமாக மாற்றுவதுதான் வாசிப்பு எனக் கருதப்பட்டது. பிறகு, வரிவடிவத்தை ஒலி வடிவமாக மாற்றுவது மட்டும் வாசிப்பல்ல. மாறாக, பொருள் அறிந்து கருத்துணர்தல்தான் வாசிப்பு எனக் குறிக்கப்பட்டது. எரிஸ் என்பவரோ அச்சில் அல்லது எழுத்தில் உள்ளவற்றைப் பொருளாக்கம் செய்வதே வாசிப்பு என்கிறார்.

இன்றைய நிலையில் அச்சிலோ கையெழுத்திலோ உள்ள செய்திகளைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து மனத்தால் பொருளுணர்ந்து கொள்வதுதான் வாசிப்பு எனக் கருதப்படுகிறது. ஆக, வாசித்தலில் கண்கள் வரிவடிவங்களை நோக்க, மனம் உணருகின்ற பொழுது பார்த்தால் (SIGHT), ஒலித்தல் (SOUND), கருத்துணர்தல் (SENCE) என்ற மூன்று செயற்பாங்குகள் நடைபெறுகின்றன. வாசிப்பு இரண்டு படிநிலைகளில் நடைபெறுகின்றது. முதலில் வாசிக்கின்ற ஒருவர் அச்சிலோ எழுத்திலோ உள்ள எழுத்துகளை அடையாளம் காண வேண்டும். தொடர்ந்து, அவற்றைப் பொருள் பெயர்க்க வேண்டும்.

மலேசியக் கல்வி அமைச்சு, தொடக்கத் தமிழ்ப்பள்ளியில் படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்கள் வாசிப்பில் பிரச்சனை எதிர்நோக்கி இருக்கின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளது. இதனிலிருந்து, விடுபட தர அடிப்படையிலான புதிய தமிழ்மொழிக் கலைத்திட்ட மொழித்திறன்களில் வாசிப்புத் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் (தர அடிப்படையிலான தமிழ்மொழிக் கலைத்திட்டம், 2010). இக்கட்டுரையில், வாய்விட்டு வாசிக்கும் உள்ளடக்கத் தரங்களைக் கற்பிக்கும் அணுகுமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு நோக்கம்

அ. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு இலகுவான வாசித்தல் முறைகளைக் கண்டறிதல்.

ஆ. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு இலகுவான வாசித்தல் முறைகளின் பயன்பாட்டினை அறிதல்

ஆய்வு நெறிமுறைகள்

பேரா மாநிலத்தில் அமைந்துள்ள தமிழ்ப்பள்ளியில் இவ்வாய்வு நடத்தப்பட்டது. இஃது ஒரு விளக்க முறையில் அமைந்த பண்புசார் ஆய்வாகும். ஆய்வு நடத்தப்பட்ட பள்ளியில் தமிழ்மொழிப் பாடத்தினை முழு நேரப் பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியரின் விளக்கமுறை ஆய்வு வடிவமைப்பிற்கு உட்படுத்தப்பட்டனர். தங்கள் பள்ளியில் தமிழ்மொழிப் பாடத்தை இலகுவாக வாசிக்கும் முறைகளைப் பற்றி விளக்கமுறையில் கேள்விகள் எழுப்பப்பட்டின. அதற்கான பதில்கள் தொகுக்கப்பட்டுக் கீழே வழங்கப்பட்டுள்ளன.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

வாசிப்பு என்பது படித்தலில் சொற்களைக் காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்று கூறுகிறார் (சுப்புரெட்டியார், ந. 2000). வாசிப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, வாய்விட்டு வாசித்தலும் மௌன வாசித்தலும் ஆகும். வாசிப்பில் சிக்கலுள்ள மாணவர்கள் வாய்விட்டு வாசிப்பதே சிறந்தது என்பதனை இவ்வாய்வுக் கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது.

வாய்விட்டு வாசித்தல்

பையப் பயிலும் மாணவர்களுக்கு வாய்விட்டு வாசிக்கும் அணுகுமுறை இன்றியமையாததாகிறது. எடுத்துக்காட்டாக, ஈரெழுத்துச் சொற்களும் சிறு பத்தி வாசித்தல் போன்ற நடவடிக்கையின்வழி பையப் பயிலும் மாணவர்களின் வாய்விட்டு வாசிக்கும் திறனை மேம்படுத்த முடியும் (கணபதி, வி. 2002). மேலும், வாய்விட்டு வாசித்தலின் வழி பையப் பயிலும் மாணவர்களைப் பள்ளி அளவில் நடத்தப்படும் போட்டியில் கலந்துகொள்ள வைப்பதால் மதிப்பீடு செய்ய முடியும்.

பார்த்துச் சொல்லும் முறையும் சொல் முறையும்

வகுப்பில் பார்த்துச் சொல்லும் முறையைப் பின்பற்றுவது இன்னும் அமலில் உள்ளது. ஈரெழுத்துச் சொல்லை வெண்பலகையிலோ மின்னட்டைகளிலோ தயாரித்து மாணவர்களுக்குக் காண்பித்து உச்சரித்துக் காட்டுவர்.



படம் 1: ஈரெழுத்துச் சொல்லட்டைகள்

ஆசிரியரைத் தொடர்ந்து பையப் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவாகச் சொல்லை வாசித்தல் வேண்டும். இவ்வாறாகச் செய்தால் பையப் பயிலும் மாணவர்களின் வாசிப்புச் சரளம் அடையும்.

அருஞ்சொற்களின் பொருளறிந்து வாசிப்பர்

படிநிலை ஒன்று பையப் பயிலும் மாணவர்களுக்கு வாசிப்புப் பகுதியையொட்டிய அருஞ்சொற்கள் உண்டு. பையப் பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியர் அவர்களின் தரத்திற்கேற்றவாறு பாடக் குறிப்பைத் தயாரித்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஈரெழுத்துச் சொற்களை வாசிக்க வைக்கலாம்.



படம் 2: உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லட்டைகள்



படம் 3: உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல்லட்டைகள்

சொற்றொடர் முறையை வாசிப்பர்

சொற்றொடர் முறையில் பையப் பயிலும் மாணவர்கள் ஈரெழுத்துச் சொற்களைப் பிழையில்லாமல் வாசிக்கின்றனர். பிறகு, வாசித்த சொற்களை இணைத்து வாசிக்கப் பழகுகின்றனர். பையப் பயிலும் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு: மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்



படம் 4: சொற்றொடர் சொல்லட்டைகள்

விளையாட்டு முறையில் வாசிப்பு

விளையாட்டு முறையைக் கையாண்டு இலகுவான வாசிப்பு முறைகள் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருக்கும். இவ்வுத்தியின்வழி, மாணவர்கள் தமிழ்மொழி இலகுவான வாசிக்கும் முறைகளை ஆர்வத்துடன் வாசிப்பதை உறுதி செய்ய முடிகிறது. அதுமட்டுமின்றி, மதிய வேளையில் நடைபெறும் பள்ளியில் மாணவர்கள் சோர்வுடனும் தூக்கத்துடனும் காணப்படுவார்கள். அவ்வேளையில் இது போன்ற உத்தியைப் பயன்படுத்திக் கற்பிப்பது மாணவர்கள் தங்கள் சோர்வை நீக்கிப் புத்துணர்ச்சியுடனும் ஆர்வத்துடனும் கற்றல் கற்பித்தலில் ஈடுபடத் துணைபுரிகின்றது.

விளையாட்டின் மூலமான கல்வி என்பது குதூகலமான கல்வி மட்டுமல்ல குழந்தைகளின் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாக உள்ளது. எடுத்துக்காட்டாக, சொல் வட்டம், சொற்சக்கரம் ஆகும். சொல் வட்டமானது, மாணவர்கள் வட்டமாக அமர்ந்து, ஒருவர் பின் ஒருவராக வட்டத்துக்கு வட்டமாக தாவி, பக்கத்து வட்டத்திலுள்ள எழுத்துகளைக் கூறுவர். மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் விளையாடி எழுத்துகளை வாசிப்பர்.

படம் 5: சொல் வட்டம்



படம் 6: சொற்சக்கரம்

ICT பயன்பாட்டுடன் வாசிப்பர்

MOE இன் முன்முயற்சியான 'குறைவான கற்பித்தல், அதிகக் கற்றல்' மூலம் வழிகாட்டப்பட்டு, மாணவர்கள் வகுப்பறையில் சுதந்திரமாகக் கற்கும் திறனை அதிகரிக்க விரும்புவதோடு, கற்றல் எந்த நேரத்திலும் எங்கும் நடைபெறுவதற்கு ICT பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. கற்பித்தல் கற்றலில் ICT பயன்பாட்டை உறுதி செய்வதற்காகக் கல்வித் தொழில்நுட்பப் பிரிவு (ETD) வழங்கியது.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு வாசிப்பை நடத்தும் பொழுது, மாணவர்கள் மிகுந்த ஈடுப்பாட்டுடன் செயல்படுவர். அவர்களும் ஆர்வத்துடன் பள்ளிக்கும் வருவர். இம்மாதிரியான கற்றல் கற்பித்தலை மேற்கொண்டு மாணவர்களைச் சரளமாக வாசிக்கத் தூண்டலாம். எடுத்துக்காட்டாக;

படம் 7: சொல் விளையாட்டு

முடிவுரை

தொடக்கப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்தில் படிநிலை ஒன்றில் பையப் பயிலும் மாணவர்களுக்கென்று இன்னும் குறைநீக்கல் போதனை இருந்த வண்ணம் இருக்கின்றது. இதனைக் களைய மலேசியக் கல்வி அமைச்சுக் குறைநீக்கல் போதனை ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பணிமனைகளை அவ்வப்போது ஏற்பாடு செய்த வண்ணமே உள்ளது (மகேந்திரன், ம. 2018). இதன்வழி, பையப் பயிலும் மாணவர்கள் தங்கள் வாசிக்கும் திறனை மேலும் மேம்படுத்திக் கொள்வார்கள்.

துணைநூற்பட்டியல்

Kanapathy, V. (2002). *Nadramil karpikkum murai [Tamil teaching method].* Chennai: Santha Publication.

Kementerian Pelajaran Malaysia. (2010). *KSSR Bahasa Tamil Tahun 1 – 3, Bahagian Pembangunan Kurikulum*, Kementerian Pelajaran Malaysia.

Mahendran, M. & Kalyani, V. (2018). *Motivating ESL Learners of Low Proficiency In Reading Through An Extensive Reading Programme.* Muallim Journal of Social Sciences and Humanities, 2(3) 177-184. Retrieved from https://mjsshonline.com/index.php/journal/article/view/61/56

Sharifah Alwiyah Alsagoff. (1983). *Ilmu pendidikan pedagogi.* Kuala Lumpur: Heinemann Educational Books (Asia). Ltd.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’ மலேசியச் சிறுகதைத் தொகுப்பு – ஓர் உளவியல் ஆய்வு

‘Nagammalin Manakkurippugal’ Malaysian Short Story Collection – A Psychological Study

மேகலாதேவி வரதராசன்/ Megaladevi Varathrajan[1]
யுவப்பிரியா இரா.செல்வன்/ Yuvapriyah R.Selvan[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை/ Manonmani Devi M.A.R Annamalai[2]*

[1]M. Ed Research Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author’s Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’ சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் உளவியல் கோட்பாட்டின்கீழ் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன. இத்திறனாய்வின் முக்கிய நோக்கம், நாகம்மாளின் மனக்குறிப்புகள் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் உளவியல் கோட்பாட்டினைக் கண்டறிவதாகும். இவ்வாய்வின் நோக்கங்கள் யாதெனில், ‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’ சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் கதைப்பாத்திரங்களின் மன உணர்வை ஆராய்தல், நாகம்மாளின் மனக்குறிப்புகள் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சிறுகதைகளின் கருப்பொருள்களின்வழி எழுத்தாளரின் மன உணர்வை ஆராய்தல் ஆகியவை ஆகும். இது ஒரு பண்புசார் ஆய்வு. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து கிடைக்கப்பெற்றவை. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் யாவும் விளக்கவியல் முறையில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் ஐந்து வெவ்வேறான முதன்மைக் கதைப்பாத்திரங்களின் மன உணர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அடுத்து, ஐந்து சிறுகதைகளின் கருப்பொருள்களின்வழி எழுத்தாளரின் மன உணர்வு கண்டுபிடிக்கப்பட்டது.

கருச்சொற்கள்: ‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’, உளவியல் திறனாய்வு, சிறுகதைகள்,

Abstract

The short stories in the collection ‘Nagammalin Manakkurippugal’ have been analyzed under psychological theory. The main objective of this analysis was to identify the psychological theory found in the short story collection. The sub-objectives of this research was to explore the emotional state of the characters in the short story collection and to analyze the author's emotional state through the themes of the short stories in the collection. This research was carried as a qualitative study. All data for this research were obtained from books, research articles, and similar sources. The findings of this research are described in a descriptive manner. In this study, the emotional states of five different main characters were identified. Next, the author's emotional state was identified through the themes of the five short stories.

Keywords: ‘Naagammaalin Manakkurippugal’, Psychological Critism, Short Stories,

முன்னுரை

ஒரு மனிதனின் வாழ்வில் எழும் சிக்கல்களைப் பிரதிபலிக்கும் வகையில் இலக்கியங்கள் உளவியல் திறனாய்வின்கீழ் ஆய்வு செய்யப்படுகிறது (Raheleh Bahador & Esmaeil Zohdi, 2015). உளவியல் கோட்பாடு ஓர் இலக்கியத்தில் காணப்படும் மறைமுகக் கருத்துகளை எடுத்துரைக்க உதவும் என (Mahroof Hossain, 2017) கூறியுள்ளார்.

தொடர்ந்து, உளவியல் என்பது ஆன்மாவைப் பற்றிய ஆய்வு என்ற கருத்துக் கைவிடப்பட்டு, மனம் என்பதோடு தொடர்புப்படுத்தப்பட்டது. உளவியல் என்பது மனிதன் உணர்ந்து செயல்படும் நடத்தைகளை மட்டுமே ஆராய்வதாகும் (சரவணகுமார், 2019) இதனை ஆங்கிலத்தில் 'Psychoanalytic Criticism' என்றழைப்பர். உளவியல் கோட்பாடு 1856-ஆம் ஆண்டில் Sigmund Freud என்பவரால் தோற்றம் கண்டுள்ளது. இக்கோட்பாடானது எழுத்தாளரின் மன உணர்வினை எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. 1920களில் உளவியல் திறனாய்வு உருவானது (Devika, 2013).

மலேசியத் தமிழர்களின் வாழ்வியலைப் பிரிதிபலிக்கக் கூடிய வரலாற்று ஆவணமாகவே சிறுகதைகளை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு எல்லாச் சூழல்களிலும் சமூகம் கடந்து வந்த பாதையைச் சிறுகதைகள் தங்கள் கருப்பொருள்களாகக் கொண்டுள்ளன (Krishanan Maniam, 2020). மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் எனும் வகைமைக்குகீழ் அதன் வரலாற்று பின்புலம், பாடுபொருள், கட்டமைப்பு, உட்கூறுகள், சமகாலச் சிக்கல்கள், கதைப்பாத்திரம், பாத்திரப்படைப்பு, இசங்கள், மரபுகள், ஒழுக்கங்கள், மொழி ஆகிய பகுப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (Vijayalatchumy & Navin, 2020).

சிறுகதைகளில் உளவியல் கோட்பாட்டினைக் காண முடியாது என்பதே இவ்வாய்வினை மேற்கொள்ள தூண்டும் சிக்கல் ஆகும். இச்சிக்கலைக் களையவே இத்திறனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரையிலும் சிறுகதைகள் உளவியல் கோட்பாட்டின்கீழ் ஆய்வு செய்யப்படவில்லை. எனவே, இவ்வாய்வினை மேற்கொள்வதன்வழி சிறுகதைகளில் காணப்படும் உளவியல் கோட்பாட்டினை அடையாளங்காண முடியும்.

ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் சேகரிக்கப்பட்டுள்ளன. நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனோகரன் கிருஷ்ணனின் படைப்பான 'நாகம்மாளின் மனக்குறிப்புகள்' சிறுகதைத் தொகுப்பினைத் தேர்வு செய்ததன் காரணம், இச்சிறுகதைத் தொகுப்பானது முறையாக இதழ்களுக்கோ நாளிதழ்களுக்கோ அனுப்பப்பட்டு வெளியிடப்படாமல் எழுத்தாளரின் வலைப்பக்கத்திலும் முகநூலிலும் எழுதியவற்றையே தொகுத்து நூலாக்கியதே ஆகும். வெவ்வேறு கருப்பொருளையுடைய சிறுகதைகளை வாசிக்கையில், படைக்கப்பட்டுள்ள வெவ்வேறான கதைமாந்தர்களின் மன உணர்வுகளை ஆராய முடிந்தது. இச்சிறுகதைத் தொகுப்பிலிருந்து வெவ்வேறு கருப்பொருளிலான 10 சிறுகதைகள் மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வில் கையாளப்படும் உளவியல் திறனாய்வு என்பது உளவியல் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு நடத்தப்படும் ஆய்வாகும்.

இவ்வாய்வு முழுவதுமாக நூலக ஆய்வு அணுகுமுறையில் ஆராயப்பட்டதால், தேவையான தரவுகள் சிறுகதைகள்வழியே சேகரிக்கப்பட்டன. பின், சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் வாசித்து, மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையான தகவல்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டன. உளவியல் கோட்பாட்டுடன் 'நாகம்மாளின் மனக்குறிப்புகள்' சிறுகதைத் தொகுப்பில் கிடைக்கப் பெற்ற, தரவுகளைக் கண்டறிந்து விளக்கவியல் முறையில் தரவுப் பகுப்பாய்வு செய்து ஆய்வின் முடிவைக் கண்டறிய முடிந்தது. மேலும் இந்த ஆய்வில் கிடைக்கப் பெரும் தகவல்கள் அனைத்தும், ஆய்வின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. ஆராயப்பட்ட, தரவுகள் ஆய்வு நோக்கதிற்கு ஏற்ப வகைபடுத்தி, பத்தி முறையில் (Text analysis) பகுத்தாயப்பட்டுள்ளன.

தரவுப் பகுப்பாய்வு

i. நாகம்மாளின் மனக்குறிப்புகள் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் முதன்மைக் கதைப்பாத்திரங்களின் மன உணர்வை ஆராய்தல்.

ஒவ்வொரு கதையிலும் முதன்மைக் கதைப்பாத்திரங்கள் ஒரே மாதிரியான பாத்திரப்படைப்பைக் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு கதைப்பாத்திரமும் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதன்வழி அக்கதைப்பாத்திரங்களின் மன உணர்வினை ஆராய முடியும்.

'மனைவி காத்திருக்கிறாள்' சிறுகதையில் முதன்மைக் கதைப்பாத்திரமான கணவன், ஆசிரியராகப் பணி புரியும் தன் மனைவியை அவளது அம்மா வீட்டிற்கு அனுப்பி விட்டு மீண்டும் அவளை அழைத்துச் செல்ல போகும் வழியில் சிக்கலை எதிர்நோக்குகிறார். நேரத்திற்கு இரயில் நிலையித்திற்குச் செல்ல வேண்டும் எனத் துடித்தார். இல்லையேல், இரயிலைத் தவறவிட வேண்டிய நிலை நேரிடும். அவ்வாறு அவர் செல்லும் வழியில் தன்னுடைய மனைவியிடத்திலிருந்து அழைப்பு வருகையில் மிகவும் பதற்றமடைவதைக் கீழே குறிப்பிட்டுள்ள வரிகளின்வழி காண முடியும்.

> "என் அவசரம் அவர்களுக்கு எப்படித் தெரியும்? தப்பித் தவறி வண்டியத் தவிற விட்டேன் என்றால் என் மனைவிக்கு யார் பதில் சொல்வது ? அப்படி அவள் முரண்டு பிடித்தால் அது என்ன ஒரு நாளில் முடிந்து போகும் சங்கதியா ?"
>
> (மனோகரன், 2020: ப. 17)

இதன்வழி, அக்கதைப்பாத்திரம் தன் மனைவியின்பால் கொண்டிருக்கும் பயத்தினை அறிய முடிகின்றது. இக்கதையில் 'பயம்' எனும் மன உணர்வு முதன்மை கதைப்பாத்திரத்தின்வழி வெளிகாட்டப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 'வெளியே ஒரு வானம்' சிறுகதையில் ஆரம்பப் பள்ளி மாணவனான ஜெயன் அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போட்டு வந்தான். அதற்கான காரணத்தை ஆசிரியர் வினவுகையில், தனக்கு 'லுக்கிமியா' நோய் உள்ளதாகக் காரணம் சொல்லி வந்தான். அவன் கூறியவற்றை நம்பாத ஆசிரியர், அவனது தாயாரை ஒரு நாள் பள்ளிக்கு வந்து பார்க்கும்படி கூறினார். பள்ளிக்கு வந்திருந்த ஜெயனின் தாயார் தனது மகன் பொய் சொல்லவில்லையென்றும், உண்மையிலேயே அவனுக்கு 'லுக்கிமியா' நோய் இருப்பதாகவும், அடுத்த வருடம் வரை மட்டுமே மருத்துவர் கெடு கொடுத்துள்ளதாகவும் கூறினார். இதனைக் கேட்ட ஆசிரியர், அம்மாணவனின்பால் இரக்கம் கொள்கிறார். சிறு வயதிலியே அவரது மாணவருக்கு ஏற்பட்ட இந்நிலையை எண்ணி மனம் கலங்குகிறார். இதனை,

> "என்னதான் அவனுக்குத் தைரியம் சொல்லி விட்டாலும், இனம் தெரியாத ஒரு பயம் லேசாக என் மனதில் எங்கோ ஒரு மூலையில் மரம் முளைத்து கிளைகள் பரப்ப ஆரம்பித்திருந்தது."
>
> (மனோகரன், 2020 : ப. 32)

எனும் வரிகளின்வழி காண முடிகின்றது. மேலேயுள்ள வரிகளின்வழி, ஆசிரியரின் 'இரக்க' மனநிலை வெளிப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இக்கதையின்வழி 'இரக்கம்' எனும் மன உணர்வு முதன்மைக் கதைப்பாத்திரத்தின்வழி காட்டப்பட்டுள்ளது.

அடுத்து, பெரும்பாலான பேருந்து ஓட்டுநர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அவர்களது மன நிலையையும் 'பள்ளி வண்டி' எனும் தலைப்பிலான சிறுகதையின்வழி காண முடியும். இச்சிறுகதையில் வரும் முனுசாமி உரிமம் இல்லாத பள்ளி வேன் ஓட்டுநர். பல முறை உரிமம் கோரி பல அலுவலகங்களுக்கு அலைந்துள்ளார். கிடைக்கவில்லையென்ற போதிலும், தன் குடும்ப வறுமையைப் போக்க, உரிமம் இல்லாமல் பள்ளி வேன் ஓட்டிக் கொண்டிருந்தார். ஒரு முறை, கோபத்தினால் காவல் அதிகாரி என்று கூட பாராமல் ஒருவரைத் திட்டினார். அதனை,

> "மண்டைக்கு மேல் மணி அடித்தது போல் கோபம் தலைக்கு மேல் ஏறிவிட்டது. பொறுத்திருந்த பல நாள் கோபம் சட்டென்று பீறிட்டு எழுந்தது. சகட்டுமேனிக்கு அவனை திட்டித்தீர்த்து விட்டேன்."
>
> (மனோகரன், 2020 : ப. 107)

எனும் வரிகளின்வழி காண முடியும். இதன்வழி இச்சிறுகதையின் முதன்மை கதைப்பாத்திரத்தின் 'கோபம்' எனும் மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளது.

'கலைந்து செல்லும் மேகங்கள்' எனும் சிறுகதையின் முதன்மை கதைப்பாத்திரமான இரகுபதி, அவனது தாயார் தொலைபேசி வாயிலாகச் சொன்ன தன் சகோதரியின் மரணச் செய்தியைக் கேட்டு மனமுடைந்தான். கீழே உள்ள வரிகளின்வழி இதனைக் காணலாம்.

> "அவனது சகோதரி விஜயா காலமான செய்தியது. தன் தலையில் இடி வந்து விழுந்தது போல் ஒரு கணம் அப்படியே உறைந்துப் போனான். கண்கள் கலங்கின, தன் இதயத்தை யாரோ சம்மட்டியில் ஓங்கி அடித்ததுப் போன்று அவன் உள்ளம் தவித்தது.
>
> (மனோகரன்,2020 : ப. 83)

மேலேயுள்ள வரிகளின்வழி, தனது சகோதரியின் பிரிவனால் துயரமடையும் இரகுபதியின் மன உணர்வைக் காண முடிகின்றது. இதன்வழி, இக்கதையின் முதன்மை கதைப்பாத்திரத்தின் 'சோகம்' மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளது.

'நெருப்புப் பிண்டங்கள்' சிறுகதையில் தாய் தந்தை இல்லாமல் வளர்ந்து வந்த கிரிஜாவின் தாத்தா அவரது பேத்திக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பதில் மன மகிழ்ச்சியடைகிறார்.

> "மாலையைப் பெற்றுக் கொண்டவுடன் தன் பேத்தியின் முகம் எப்படி மலரும் என்பதை நினைத்தவுடன் அவனுள் ஒரு சந்தோசம் பற்றிக் கொண்டது."
>
> (மனோகரன்,2020 : ப. 90)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரிகளின்வழி, தனது பேத்தியின் பூஜைக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பதில் தாத்தா மனமகிழ்வு அடைவதனைக் காண முடிகின்றது. இச்சிறுகதையின் முதன்மைக் கதைப்பாத்திரத்தின்வழி 'மகிழ்ச்சி' எனும் மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளது.

ii. நாகம்மாளின் மனக்குறிப்புகள் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சிறுகதைகளின் கருப்பொருள்களின்வழி எழுத்தாளரின் மன உணர்வை ஆராய்தல்.

கருப்பொருளானது ஒவ்வொரு சிறுகதைக்கும் மிகவும் அவசியம். கருப்பொருளன்றி சிறுகதையில் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்கிற தகவல் முழுமை பெறாது. எழுத்தாளர் தேர்வு செய்யும் கருப்பொருளின்வழி அவரின் மன வெளிப்பாட்டினை அறிய முடியும்.

'நாகம்மாளின் மனக்குறிப்புகள்' சிறுகதையில் தன்னுடைய தாயின் வீட்டிற்குச் சென்றிருக்கும் வேளையில் தன் தாயின்றி வெறுமனே இருக்கும் வீட்டினைத் தான் சிறு குழந்தையாக இருந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார் எழுத்தாசிரியர். அதோடு, பழைய நினைவுகளையும் நினைத்துப் பார்ப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சிறுகதையில் தன் தாயை முதன்மையாக வைத்து பேசியுள்ளதால் 'தாய்ப்பாசம்' இச்சிறுகதையின் கருவாகும். எனவே, இச்சிறுகதையின்வழி, எழுத்தாளர் தன் தாயின்பால் கொண்டுள்ள 'அன்பு' எனும் மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளது. அதனை,

> "மெல்ல அம்மாவின் கையும் ஒரு வழியாக சுகமாகிக் கொண்டிருந்தது. இருண்ட எங்களின் தோட்டம் இன்று கிராமமாகி சிறு பட்டினமாய் மாறியிருக்கிறது."
>
> (மனோகரன், 2020 : ப. 143)

எனும் வரிகளில் காண முடிகின்றது.

தொடர்ந்து, 'அற்றைக்கூலி' சிறுகதையின் கரு 'தந்தையின் கனவு' என்பதாகும். தொழிற்சாலையில் வேலைச் செய்யும் தந்தைக்குப் பொறுப்பில்லாத மகன். அவனைத் தன்னுடைய தொழிற்சாலையிலேயே பணியில் அமர்வு செய்ய வேண்டுமென அவரது எண்ணத்தையும் அந்த மகன் பொருட்படுத்தவில்லை. அதன் பின்னர், தாமாக ஒரு தோட்டம்

போட்டுச் சொந்தத் தொழிலைத் தொடங்க வேண்டும் என எண்ணியவருக்குப் பேரிழப்பாய் போனது மகனுக்கு ஏற்பட்ட விபத்து. நினைத்த காரியம் கைக்கூடி வருகின்ற சமயத்தில் ஏற்பட்ட இப்பேரிழப்பின்வழி எழுத்தாளர் வெளிப்படுத்தும் விரக்தி மன உணர்வினைக் காண முடிகின்றது.

> "இனி, அந்த நிலத்திலும் அவரது வியர்வைத் துளிகள்தான் ஈரமாய் இறங்குமோ. காலமெல்லாம் கண்ணீரில்தான் கரையுமோ?"
>
> (மனோகரன்,2020 : ப. 78)

எனும் வரிகளின்வழி ஒரு தந்தையின் ஆசை நிறைவேறாமல் போனதால் அவர் அடையும் 'விரக்தி' மன உணர்வு காட்டப்பட்டுள்ளது.

மேலும், 'ஆன்மாக்களின் தரிசனமும் கடவுளின் வார்த்தைகளும்' சிறுகதையின் முதன்மைக் கதைப்பாத்திரமான கடுங்கோன்மேயரின் கருத்துகள் வாழ்க்கைக்குத் தேவையான போதிய பாடங்களை எடுத்தியம்பும் வகையில் படைக்கப்பட்டுள்ளது. இச்சிறுகதையின் கரு 'தமிழரின் நிலை' என்பதாகும்.

> "இது எந்த யுகம் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா ? இன்னும் சில காலத்தில் ஊழிக்காலம் கடக்கப் போகிறது. தமிழர்கள் காலாகாலத்தில் கருத்தோடு எதையும் செய்வதில்லை. காலம் கடந்த பின் வருந்தி என்ன பயன் ?"
>
> (மனோகரன்,2020 : ப. 41)

வரிகளின்வழி இன்றைய வாழ்வியலை வகைப்படுத்தும் கருத்துகளை உணர முடிகின்றது. இதன்வழி, இன்றைய தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான கருத்துகளை முன் வைப்பதன்வழி தமிழர்களின் நிலை குறித்து எழுத்தாளரின் 'கோபம்' மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

அடுத்து, 'மனக்கதவுகள் நனைகின்றன' எனும் சிறுகதையில் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் சென்ற தன் நண்பனை நினைத்துக் கவலையடையும் ஒரு நண்பனின் உணர்வினைக் காண முடிகின்றது. இச்சிறுகதையின் கருப்பொருள் ' பிரிந்த நட்பு' ஆகும்.

> "எங்கோ ஒரு நிழலில் ஒதுங்கிய அவனின் உயிரற்ற உடல் எங்களின் மனங்களிலிருந்து பதிப்பிக்கப்பட்ட பிம்பமாய் வெளியேற மறுக்கின்றன"
>
> (மனோகரன், 2020 : ப. 100)

எனும் வரிகளின்வழி, பிரிந்த நட்பை எண்ணி எழுத்தாளர் உணர்த்தும் 'சோகம்' எனும் மன உணர்வு வெளிகாட்டப்பட்டுள்ளது.

அடுத்து, 'வட்டிப்பணம்' சிறுகதையின்வழி மிக விரைவிலேயெ பணக்காரரான இராம், பரிதாபமாக உயிர் துறந்த அவல நிலையைக் காண முடிகின்றது. இச்சிறுகதையின் கருப்பொருள் 'வட்டித்தொழிலின் தீமை' என்பதாகும். இச்சிறுகதையின்வழி, பேராசை எனும் மன உணர்வினை எழுத்தாளர் வெளிக்காட்டியுள்ளார்.

> "யுனிவெர்சிட்டி மருத்துவமனையின் அவசர பிரிவில் அவரை இறக்க முற்பட்டபோது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்த வேளையிலும் கண்

திறந்து பார்த்த ராம் தன்னுடைய புத்தம் புதிய பி எம் டபில்யூ வாகனம் எங்கே என்று கேட்டுக் கொண்டே பரிதாபமாக உயிர் துறந்தார்.”

(மனோகரன், 2020 : ப. 59)

எனும் வரிகளின்வழி, ‘பேராசை’ மன உணர்வினால் தீமையே விளையும் எனும் எழுத்தாளரின் மன உணர்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’ சிறுகதைத் தொகுப்பு 2020-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நூல் ஆகும். தற்கால சிறுகதைகளிலும் உளவியல் கோட்பாட்டுக் காணப்பட்டுள்ளது. உளவியல் கோட்பாட்டின் துணைக் கொண்டு இச்சிறுகதைத் தொகுப்பு அணுகப்பட்டது.

இவ்வாய்வின் நோக்கம் ‘நாகம்மாளின் மனக்குறிப்புகள்’ சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் உளவியல் கோட்பாட்டினைக் கண்டறிவதாகும். அவ்வகையில் சிறுகதைத் தொகுப்பில் காணப்பட்ட முதன்மைக் கதைப்பாத்திரங்களின்ன் மன உணர்வு கண்டுபிடித்து விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் சுமார், ஐந்து வெவ்வேறான முதன்மை கதைப்பாத்திரங்களின் மன உணர்வுகள் கண்டறியப்பட்டுள்ளது. அடுத்து, வெவ்வேறான கருப்பொருள்களுடைய சிறுகதைகள்வழி எழுத்தாளரின் மன உணர்வு விளக்கப்பட்டுள்ளது. ஐந்து வெவ்வேறான கருப்பொருள்களின்வழி எழுத்தாளரின் மன ஊணர்வுகள் கண்டறியப்பட்டுள்ளன. இச்சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 15 சிறுகதைகள் இருந்தாலும், அவற்றிள் மாறுப்பட்ட 10 கருப்பொருள்களையுடைய சிறுகதைகள் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் இரண்டு நோக்கங்களும் கண்டறியப்பட்டுள்ளன. ஆகவே, இச்சிறுகதைத் தொகுப்பு உளவியல் கோட்பாட்டின்கீழ் எழுதப்பட்டுள்ளது.

நிறைவுரை

முடிவாக, மனோகரன் கிருஷ்ணனால் படைக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பானது தற்காலத்திலும் இலக்கியங்கள் உளவியல் கோட்பாட்டின்கீழ் எழுதப்படுகிறது என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது. சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரையிலும் படைக்கப்படும் தமிழ் இலக்கியங்கள் உளவியல் கோட்பாட்டினை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான படைப்பிலக்கியங்கள் இதோடு நின்று விடாமல், மேலும் பல இலக்கியங்கள் இக்கோட்பட்டின்கீழ் படைக்கப்பட வேண்டும். இனி வரும் காலங்களில் இக்கோட்பாட்டினையோ இச்சிறுகதைத் தொகுப்பினையோ கொண்டு புதிதாக ஆய்வினைத் தொடங்கும் மாணவர்களுக்கு இத்திறனாய்வானது பெரும் துணையாக இருக்கும். அதுமட்டுமல்லாது, சிறுகதைகளைக் கோட்பாட்டுக்குட்படுத்திய ஆய்வுகள் மேலும் பல மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன்வழி, மலேசிய எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களின் தரத்தினை உயர்த்த முடியும்.

துணைநூற்பட்டியல்

Ilango,S. (2016). Psychological Analysis in Tamil: Origins and Development – A Historical View. Source: http://aaivussuttram.blogspot.com/2016/09/blog-post.html

Karthika, K. (2017). Thirukkural from a Psychological Perspective. Source: http://www.shanlaxjournals.in/pdf/TS/V2N1/TAM_V2_N1_030.pdf

Saravanakumar. (2019). Educational Psychology. Madurai: Shanlax Publication.

Taya, G. (2020). Nagammalin Manakkurippugal – Review of the Book Read. Source: http://tayagvellairoja.blogspot.com/2020/12/blog-post_26.html?m=1

Manogaran Krishnan. (2020). Nagammalin Manakkurippugal. Malaysia: Firdaus Press Sdn.Bhd.

Devika, S. (2013). Basics of Psychoanalytic Criticism. Source: https://drdevika.wordpress.com/2016/11/02/basics-of-psychoanalytic-criticism/

Krishanan Maniam. (2020). Trends of recent Malaysian Tamil short stories. Source: https://ejournal.um.edu.my/index.php/JIS/article/view/27725

Mahroof Hossain. (2017). Psychoanalytic Theory used in English Literature: A Descriptive Study. Source: https://globaljournals.org/GJHSS_Volume17/3-Psychoanalytic-Theory-used.pdf

Nasrullah Mambrol. (2016). Freudian Psychoanalysis. Source: https://literariness.org/2016/04/16/freudian-psychoanalysis/

Norman N. Holland (2000). The Mind and the Book: A Long Look at Psychoanalytic Literary Criticism. Source: https://link.springer.com/article/10.1023/A:1010179018453

Raheleh Bahador, Esmaeil Zohdi. (2015). Alice Munro's "Runaway" in the Mirror of Sigmund Freud. Source: https://www.journals.aiac.org.au/index.php/IJALEL/article/view/1221

Vijayalatchumy M., Ms., Navin M., Mr. (2020). History of Malaysian Tamil Short Stories and its Chronology) Source: https://tamilperaivu.um.edu.my/index.php/tamilperaivu/issue/view/1760/fulljournal_vol_9_2